பக்கங்கள் : 12+IV= பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 21 புதன்கிழமை (06-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:251

நல்லூர் உற்சவத்தையொட்டி

## பல்வேறு இடங்களிலிருந்து குடாநாட்டுக்கு திருடர்கள்

யாழ்ப்பாணம்,ஓக.6

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி புத்தளம் பகுதியில் இருந்து அதிகளவிலான திருடர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளதாக யாழ். பொலீஸ் நிலைய குற்றவியல் பொலீஸ் அதிகாரி எஸ். கமகே தெரிவித்திருக்கின்றார்.

திருவிழா நேரங்களில் சனநெருக்கடி அதிகம் இருப்பதைப் பயன்படுத்தி அவர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். நல்லூர் உற்சவத்தையொட்டி நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் திருடர்கள் குடாநாட்டுக்கு வந்துள்ளதாகவும் பொலீஸார் கூறுகின்றனர்.

பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இந்தத் திருட்டுக்களில் ஈடுபடுவதாகப் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் ஆலயத் திருவிழாவில்

## தொண்டரைத் தாக்கியோர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.6

நல்லூர் ஆலய உற்சவ காலக் கடமையில் ஈடுபட்டிருந்த தொண்டரைத் தாக்கிய இளைஞர் குழு மடக்கிப் பிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆலய உற்சவம் முடிந்த பின்னர் தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்த மக்கள் சேவைச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

இவர் கடமையில் ஈடுபட்டிருந்த போது இளைஞர் குழு ஒன்று இவரைத் தாக்கியதாகவும - பொதுமக்களின் உதவியுடன் சிறப்புச் செயலணியினர் சம்பந்தப்பட்ட இளைஞர் குழுவை மடக்கிப் பிடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள

# 1,454 பாதுகாப்பு நிலைகளில் ஆக 56 தான் அகற்றப்பட்டன!

## ஒப்பந்தத்தால் ஏற்பட்ட மாற்றம் இவ்வளவுதான் என அரசு ஒப்புதல்

கொழும்பு,ஓகஸ்ட்6

**ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் வடக்கு - கிழக்கிலுள்ள முப்படைகளினதும் பொலீஸாரினதும் ஆயிரத்து 454 முகாம்கள், சோதனைச்சாவடிகள், காவல் நிலையங்கள், பதுங்குகுழிகள் ஆகியவற்றில் 56 பாதுகாப்பு நிலைகள் இதுவரை அகற்றப்பட்டிருக்கின்றன. உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.**

வடக்கு-கிழக்கிலுள்ள பாதுகாப்பு நிலைகள் தொடர்பாக பொ.ஐ. முன்னணியின் கம்பஹா மாவட்ட எம்பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபையில் எழுப்பிய வாய்மூல கேள்வி ஒன்றுக்கான பதிலிலேயே அமைச்சர் இந்த விவரத்தை தெரிவித்தார்.

ஐ.தே.முன்னணி அரசு பதவிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.ரயில் நிலைய கட்டடச் சுவரில் எச்சரிக்கை வாசகம்!

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்ரயில் நிலைய கட்டடப் பகுதி மற்றும் அதனை சூழவுள்ள இடங்களில் இடம்பெறும் சமூகச் சீர்கேடுகள் தொடர்பாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ரயில் நிலையக் கட்டடச் சுவரில் யாழ்நகர் மேற்கு விழிப்புக்குழு என்ற பெயரில் இந்த எச்சரிக்கை வாசகம் எழுதப்பட்டுள்ளது.

மக்களின் பண்பாட்டினை சிதைக்கும் முகமாக கலாசார சீரழிவுகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரும்பொருள் பாதுகாப்பு நடுவம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி,ஓக.6

தமிழீழ அரும் பொருள்கள் பாதுகாப்பு நடுவம் நேற்று கிளிநொச்சியில அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி தூயவன் அரசறிவியற் கல்லூரி மண்டபத்தில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினர்.

தமிழீழத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் தொல்பொருள்களையும் நாளைய வரலாறாகும் இன்றைய பொருள்களையும் பாதுகாத்தல் மற்றும் போர்க்கால நினைவுச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தமருத்துவ மாணவரால் பல்கலை. வான் தடுத்து வைப்பு

### பேச்சின் பின்னர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

கைதடியில் உள்ள சித்த மருத்துவத்துறைக்குச் சென்ற யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான வானை சித்த மருத்துவ மாணவர்கள் நேற்று முற்றுகையிட்டு தடுத்து வைத்திருந்தனர். பின்னர் பேராசிரியர்கள் அடங்கிய குழுவினர் சென்று பேச்சு நடத்தியதையடுத்து மாணவர்கள் வானை விடுவித்தனர்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை பீடமாக்கும்படி கோரி சித்த மருத்துவ மாணவர்கள் போராட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதி மறுக்கப்பட்ட 16 மாணவரை மருத்துவ பீடத்தில் சேர்க்க உத்தரவு

### நஷ்ட ஈடு வழங்கவும் உயர் நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு,ஓக6

2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி அதிக புள்ளிகள் பெற்றும் தங்களை மருத்துவ பீடத்தில் சேர்த்துக் கொள்ளத் தவறிவிட்டதாகத் தெரிவித்து, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எதிராக 16 மாணவர்கள் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

மனுதாரர்கள் பதினாறுபேரையும் மருத்துவ பீடத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும் - அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படியும் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிரானி பண்டாரநாயக்க, (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் விஸா விண்ணப்பத்தில் கைரேகை பதியக் கோருவதா?

### ஆட்சேபித்து மங்கள சமரவீர வழக்கு

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் தற்போது விஸா பெறும் முறையில் நடைமுறைப்படுத்தப்படும் கைவிரல் ரேகை பதியும் புதிய முறைமைக்கெதிராக பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

பிரதமர், 'அமைச்சரவை அமைச்சர்கள், சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மங்கள சமரவீரவுடன் பொ.ஐ.மு. உறுப்பினர் ரூவான் பெர்னாண்டஸும் சேர்ந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் விஸா பெறும் முறையில் அமுல்படுத்தியுள்ள புதிய நடைமுறை இலங்கையின் அரசமைப்பை மீறும் நடவடிக்கை என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-5-9)

## மடுமாதா திருத்தல திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

கத்தோலிக்க மக்களின் பிரதான யாத்திரைத் தலமாக விளங்கும் மடுமாதா திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலையில் நடைபெறும் ஆராதனைகளை அடுத்து எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனை இடம்பெறும். மறுநாள் 15ஆம் திகதி திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படும். திருவிழா திருப்பலி பாடற் பூசையை அடுத்து மடுமாதாவின் திருச்சொரூப பவனி நடைபெறும்.

இத்திருவிழாவுக்கான விசேட ஏற்பாடுகளை மன்னார் மறைமாவட்ட ஆயர், மன்னார் அரசாங்க அதிபர், பொலீஸார், இராணுவத்தினர் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களை விட பெருந்திரளாக தென்னிலங்கை மக்கள் உட்பட யாத்திரிகர்கள் இத்திருவிழாவில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-5-9)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# ஏ–9 பாதை திருத்தப் பணிகள் ஒக்ரோபரில் முடிவடையும்

## நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவிப்பு

ஏ-9 பாதை இவ்வாண்டு ஒக்ரோபர் மாதமளவில் பூரணமாகத் திருததப்பட்டுவிடும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஓமந்தையிலிருந்து முகமாலை வரையிலான பாதையில் திருத்த வேலைகள் அநேகமாக முடிவடைந்திருப்பதாக அமைச்சின் செயலாளர் உபசேன சேனநாயக்கா தெரிவித்தார்.

ஏ-9 தரைப்பாதை ஓரமாக உள்ள பகுதிகளில். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் கண்ணிவெடிகளை அப்புறப்படுத்தியதும் நெடுஞ்சாலை திருத்தியமைக்கப்பட்டு வேலை முடிவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ஒ-9-5)

# கொழும்பு இந்துக் கல்லூரியில் 'இயற்றமிழ் வேள்வி-2003' விழா

கொழும்பு,ஓக.6

கொழும்பு இந்துக்கல்லூரியினர் நடத்தும் 'இயற்றமிழ் வேள்வி - 2003' விழா எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

கொழும்பு இந்துக்கல்லூரி சொலலாடற் களரி என்னும் விவாத சாம்ராச்சியத்தினரின் ஏற்பாட்டில் அதன் காப்பாளர் த.முத்துக்குமாரசாமி தலைமையில் விழா நடைபெறும்.

பிரதம விருந்தினராக வவுனியா நீதிவான் மா.இளஞ்செழியன் கலந்துகொள்வார்.

இந்த விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக கல்லூரியில சமுகமளிக்குமாறு கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் கேட்டிருக்கிறார்.

(ஐ)

# பல்கலை. துணைவேந்தர்கள் ஜனாதிபதியுடன் இன்று பேச்சு

தற்போது பல்கலைக்கழகங்களில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள் - ஜனாதிபதியை இன்று சந்தித்துப் பேசவுள்ளனர். இந்தச் சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஜூன் 12ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களுடனான கலந்துரையாடலின் முன்னேற்றம், குறித்து ஆராய்வதே இன்றைய சந்திப்பின் நோக்கமாகும்.

பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகள் பற்றி, துணைவேந்தர்கள் முதல்சுற்றுப் பேச்சின்போது ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். பல்கலைகழக மாணவர் ஒருவருக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி குறைந்துள்ளது என்று அப்போது பிரதானமாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

2001ஆம் ஆண்டில் 48,752 பேர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டனர். அப்போது ஒரு மாணவருக்கு 74,327 ரூபா ஒதுக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கவிருக்கும் மாணவர் தொகை சுமார் 65,000 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் ஒரு மாணவருக்கு ஒதுக்கப்படும் பணம் 52,558 ரூபாவாகக் குறைந்துள்ளது.

ஒருவருடத்தில் ஒரு மாணவருக்குத் தலா 75,000 ரூபா வீதம் ஒதுக்கும்படி துணைவேந்தர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், மாணவர் விடுதி வசதிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான வருவாய் பெறும் வழிகள் ஆகியவை பற்றி இன்று நடைபெற இருக்கும் உரையாடலின்போது கவனத்தில் கொள்ளப்படும். அத்தோடு, பல்கலைக்கழக மறுசீரமைப்பு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களும் இக்கலந்துரையாடலின்போது கருத்திற் கொள்ளப்படும்.

மூன்றாம்நிலை மற்றும் பயிற்சிகள் அமைச்சர் ஜனாப் கபிர் ஹாசீம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள், திறைசேரி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்த

# ஜனாதிபதியின் விளக்கக் கூட்டம் நேற்றைய தினம் இடம்பெறவில்லை

ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பாக விளக்கமளிக்க ஜனாதிபதி கூட்டவிருந்த கூட்டம் நேற்று நடைபெறவில்லை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இக்கூட்டத்துக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

எனினும், இறுதி நேரத்தில் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உத்தேச முன்னணி குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் கருத்து முரண்பாடு கொண்டுள்ளன. இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் முயற்சியாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சக முன்னணிக் கட்சிகளின் தலா இரு உறுப்பினர்களை கூட்டமொன்றுக்கு அழைத்திருந்தார்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதை சில கட்சிகள் விரும்பவில்லை எனவும், இதனாலேயே கூட்டம் பிறிதொரு தினத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது எனவும் அறியப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவை ஜே.வி.பி. - சு.க. முன்னணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

# மாகாண சபைத் தேர்தல்களுக்கு முகம் கொடுக்க ஐ.தே.க. ஏற்பாடு

## வேட்பாளர் தெரிவு குறித்து ஏனைய கட்சிகளுடன் பேச்சு

கொழும்பு,ஓக.6

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களுக்கு முகம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென ஐ.தே.க. செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

இதனையடுத்து, தேர்தல்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது குறித்து ஐ.தே.முன்னணியின் ஏனைய கட்சிகளுடன் ஐ.தே.க. பேச்சு நடத்தவிருக்கிறது. ஐ.தே.கவின் நியமனப் பத்திரங்கள் செய்திப் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் கோரப்படவிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் கூடிய ஐ.தே.க செயற்குழு தென்மாகாண சபையின் ஐந்து ஐ.தே.க.உறுப்பினர்களின் கட்சி அங்கத்துவத்தை இடைநிறுத்துவதெனவும் தீர்மானித்திருக்கிறது.

கட்சியின் அனுமதியின்றி அண்மையில் இந்திய விஜயத்தை மேற்கொண்டதற்காகவே அவர்களுக்கு எதிராக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. லால் சந்திர, பேபி வீரசிங்க, சிறி விஜய விக்கிரம, கபில வெல்லப்புலி, பியதாச அபேவிக்கிரம ஆகியோரே இந்த ஐந்து உறுப்பினர்களுமாவர். (ஒ)

## சு.க. - ஜே.வி.பி. கூட்டுக்கு சமசமாஜக்கட்சி எதிர்ப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வதற்கு லங்கா சமசமாஜக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களுக்கும் பொ.ஐ.முவில் அங்கம் வகிக்கும் எமது கட்சிக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். (ஒ-9-5)

# தோ.தொழிலாளருக்கு முற்பணம் வழங்க 6 கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு,ஓக.6

கண்டி மாவட்டத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் முற்பணம் வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து 6 கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சபைத் தலைவர் மதியுக ராஜா தெரிவித்தார்.

எனினும், கடந்த ஐந்து நாள்களாக வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு நேற்று வரை சம்பளமோ அன்றி முற்பணமோ வழங்கப்படவில்லை.

ரங்கல, பன்வில, புப்புரஸ்ஸ போன்ற பகுதிகளில் தோட்டத் தொழிற் சங்கக் காரியாலயங்களை முற்றுகையிட்டு, தமக்கு உடனடியாக தீர்வு பெற்றுத்தருமாறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளை தொழிலாளர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

நேற்று புப்புரஸ்ஸ லெவலன் தோட்டத்திலும் ரங்கல தோட்டத்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

(முன்னர் வந்த செய்தி IV ஆம் பக்கத்தில்)

(ஒ)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனை:

# சிஹல உறுமய, பிக்குகள் முன்னணி, ஜே.வி.பி. எதிர்ப்புப் பிரசாரங்கள்!

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைக்கு எதிராக ஜே.வி.பி., சிஹல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி என்பன பிரசார இயக்கங்களை ஆரம்பித்திருக்கின்றன. சிஹல உறுமய ஏற்கனவே வீதிப்பிரசாரங்களை ஆரம்பித்திருக்கின்றது. தேசிய பிக்குகள் முன்னணி நேற்றுமுதல் பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதி வரை ஜே.வி.பி. பிரசாரத்தில் ஈடுபடவிருக்கின்றது.

வீட்டுக்கு வீடு சென்று பிரசாரம் செய்யும், நிதி சேகரிக்கும் திட்டத்தை சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரத்ன கடந்த 2 ஆம் திகதி நுகேகொடையில் ஆரம்பித்தார்.

தேசிய பிக்குகள் முன்னணி துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலமும், விகாரைகளில் கூட்டங்களை நடத்துவதன் மூலமும் தனது எதிர்ப்புப் பிரசாரத்தை ஆரம்பித்திருக்கின்றது.

ஜே.வி.பியின் எதிர்ப்புப் பிரசாரம் கொழும்பு, கம்பஹா, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், நுவரெலியா, கண்டி உட்பட 19 மாவட்டங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ)

# வெளியிட மீன் விற்பனைக்கு நீர்கொழும்பு மீனவர் எதிர்ப்பு

கொழும்பு,ஓக.6

நீர்கொழும்பு மீனவர்கள் நேற்றுக்காலை, ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்படும் மீன்கள் நீர்கொழும்பு மீன் மொத்த விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதை ஆட்சேபித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை 5மணிமுதல் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் நீர்கொழும்பு - பிட்டிபன பாதையில் மொத்த விற்பனை நிலையமருகே பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்பிட்டி, புத்தளம், வத்தலகுண்டு ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்படும் மீன்கள் இங்கு விற்பனை செய்யப்படுவதால் மொத்த விற்பனை நிலையத்தில் மீன் விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவதாக நீர்கொழும்பு மீனவர்கள முறையிடுகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் நேற்றுக் காலை சந்தையில் வியாபாரம் எதுவும் நடைபெறவில்லை. மீன்பிடி வள்ளங்களில் எடுத்து வரப்பட்ட மீன்களும் கரையிறக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் அந்த இடத்துக்கு காலை 9மணியளவில் வந்த பொலீஸார் மீனவர்களுடன் பேசி சமரசம் செய்து வைத்தனர் எனக் கூறப்பட்டது. (ஒ)

## வடக்கு - கிழக்குப் பகுதியில்

# சுகாதார சேவைகளை மேம்படுத்த ரூ.26 கோடி நிதி ஒதுக்கத் தீர்மானம்

## அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு 26 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் இப்படிக் கூறினார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் 30 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விசேட வைத்தியப் பிரிவையும், விஷ, முறிவு வைத்தியப் பிரிவையும் திறந்து வைத்த அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதிப்படைந்துள்ள சுகாதார சேவையை சீர்செய்யும் பொருட்டு வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொத்துவில், அம்பாறை ஆகிய நகரங்களில் இருக்கின்ற பிரதான வைத்தியசாலைகளை நவீன வசதி கொண்டவையாக தர முயர்த்துவதற்கான வேலைத் திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

தெற்காசிய நாடுகளில் இலங்கையிலே சுகாதார சேவைகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைமையே காணப்படுகிறது.

- இப்படி அமைச்சர் கூறினார். (ஒ-9-5)

# ஜனக எம்.பி.உட்பட 8 பேரை கைது செய்ய நீதிவான் உத்தரவு

## மரண அச்சுறுத்தல் குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு,ஓக.6

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரை அச்சுறுத்தினார் எனக் கூறி மாத்தளை மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோனை கைது செய்யுமாறு தம்புள்ள நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தம்புள்ள பொ.ஐ.மு. கூட்டத்துக்கான சோடனைகளை நாசப்படுத்தினார் எனக் கூறப்படும் ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று மரண அச்சுறுத்தல் விடுத்தனர் எனக் கூறப்படும் இருவர் நேற்றுக்காலை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தம்புள்ள பொலீஸாரினால் நேற்றுப்பகல் தம்புள்ள நீதிவான் சாலிய பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஜனக பண்டார தென்னக்கோன் எம்.பி. உட்பட மேலும் 8 பேரைக் கைது செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட இருவரும் எதிர்வரும் 18 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவிருக்கின்றனர்.

(ஒ)

## தேர்தல் முறையை மாற்றும் யோசனை:

# தெரிவுக்குழு தலைவர் பதவியை ஏற்க பொ.ஐ.மு. நிறைவேற்றுக்குழு முடிவு

கொழும்பு,ஓக.6

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு வழங்குவது என்ற அரசின் யோசனையை பொ.ஐ.முன்னணி ஏற்றுக்கொள்வது எனத் தீர்மானித்து இருக்கிறது.

இக்குழுவின் தலைவர் பதவியை பொ.ஐ.முன்னணி உறுப்பினரும் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவருமான தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்குவதென அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

பொ.ஐ.முன்னணி நேற்றுமுன்தினம் நடத்திய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் அரசின் தீர்மானத்துடன் இணங்குவதென தீர்மானிக்கப்பட்டது என்று பொ.ஐ.மு. பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்தின் நடைமுறைகளில் எதிர்க்கட்சியை நேரடியாக பங்குபெறச் செய்யும் ஒரு நடவடிக்கையின் தொடக்கம் இது என்று பல எதிர்க்கட்சிகள் வரவேற்பு தெரிவித்திருக்கின்றன.

## நீதிவானுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.6

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகர, செயற்றிட்ட அதிகாரி செல்வி வேளினி ஆகியோர் நேற்று மாலை யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு யாழ். நீதிமன்றில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றியும், நீதிமன்ற நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார். (ஒ-8)

## விபத்தில் இருவர் காயம்!

தெல்லிப்பழை,ஓக.6

மல்லாகம் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் கணவரும் மனைவியும் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்குச் சென்று திரும்பும் வழியில் நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-150)

# எய்ட்ஸ் பீடித்திருக்கும் இருவர் திருமணம் செய்ய சீனா அனுமதி

எய்ட்ஸ் நோய் பீடித்திருக்கும் இருவர் திருமணம் செய்து கொள்வதற்கு சீன அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

இவர்கள் இருவருக்கும் நேற்றுமுன்தினம் சட்டபூர்வமாக தென் சீன மாகாணமான சிசூவானாவில் திருமணம் நடந்தது.

37 வயதுடைய மணமகனும் 34 வயதுடைய மணமகளும் நீண்ட காலமாக காதலித்து வந்தனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் வசிக்கும் நகரத்தில் 67 பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 25 பேர் இந்நோய்க்குப் பலியாகியிருக்கிறார்கள். ஏனையோர் இன்னமும் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு 1990ஆம் ஆண்டு சட்டவிரோதமாக இரத்தம் விற்கப்பட்டதையடுத்து எய்ட்ஸ் நோய் பலருக்குத் தொற்றிக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கிடையே -

தென்ஆபிரிக்காவில் எய்ட்ஸ் நோய் மிக வேகமாகப்பரவும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

டேர்பனில் நடைபெற்ற எய்ட்ஸ் ஒழிப்பு தேசிய மாநாட்டின்போதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு நடைபெற்ற கட்டடத்திற்கு வெளியே எய்ட்ஸ் நோய் தடுப்புச் சங்கத்தைச் சேர்ந்த பலர் எய்ட்ஸ நோயை எதிர்க்கும் வாசகங்களைப் பொறித்த ரி-சேட்டுகளை அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கும் நடவடிக்கைக்கு எதிராக இவர்கள் குரல் எழுப்பினர்.

கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் ஆதரவுடன் இத்தகைய மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ம)

# காதலனின் வீட்டுக்கு முன் காதலி நிர்வாணப் போர்!

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரைச் சேர்ந்த இசபெல் ஸ்டாசிக் என்ற 46 வயதுப் பெண், தனது காதலனின் வீட்டுக்கு முன்பாக நின்று ஆடைகளை அவிழ்த்தெறிந்துவிட்டு நிர்வாணப் போர் நடத்திய சம்பவம் அண்மையில் நடந்துள்ளது.

முன்னாள் விளம்பர மொடலான தனது காதலனுடனான உறவில் இவளுக்கு பெண் குழந்தை ஒன்று பிறந்தது. ஆனால், அந்தக் குழந்தை, தனகுப் பிறக்கவில்லை என்று காதலன் மறுக்கிறான். இது தொடர்பாக காதலி நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்துள்ளார். எனினும், நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை பொறுமை இல்லாத இவர், தனது காதலனையும், குழந்தையையும் மரபணு சோதனை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தியே காதலனின் வீட்டுக்கு முன்னால் நிர்வாணப் போராட்டம் நடத்தினார்.

காதலியின் இந்தச் செயல் குறித்து, பொலீஸாரிடம் காதலன் முறையிட்டதையடுத்து அங்கு விரைந்த பொலீஸார், நிர்வாணமாக நின்ற அந்த பெண்ணுக்கு உடை அணிவித்து சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றனர். (ம)

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பரவும்

# கட்டுக்கடங்கா காட்டுத் தீயால் அவசரகால நிலை பிரகடனம்!

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணப் பகுதிகளில் முளாசி எரியும் காட்டுத் தீ புதிதாக மேலும் 25 இடங்களுக்குப் பரவியதையடுத்து அங்குள்ள சில பகுதிகளுக்குப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அவசர காலநிலை மாகாணம முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

மாகாணத்தில் உள்ள 250இற்கும் மேற்பட்ட இடங்களில் தீ கொழுந்து விட்டு எரிகிறது. இதுவரை பத்தாயிரம் பேர் தமது வீடுகளைக் கைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள். குறைந்தது 75 வீடுகள், 150 தங்குமடங்கள், மூன்று வர்த்தக நிலையங்கள், ஒரு மர அரிவு ஆலை என்பன எரிந்து நாசமாகியிருக்கின்றன.

1,800 தீயணைப்பு வீரர்களும் 100 கனேடிய இராணுவத்தினரும் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தீயைக் கட்டுப்படுத்த அதிக நிதி உதவி தேவையெனக் கனேடிய அரசுக்கு மாகாண ஆட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

காட்டுத்தீ கட்டுக்கடங்காமல் பரவுவதையடுத்து அங்குள்ள காடுகளைச் சுற்றிப் பார்க்கச் சென்ற சுற்றுலாப் பயணிகள், விடுதிகளில் முடங்கியுள்ளனர். இதனால், சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கபபடுகிறது.

# சமாதானப் பேச்சு நடத்த வேண்டுமாயின் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவேண்டும்

## நேபாள முன்னாள் பிரதமர் வலியுறுத்து

மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் விடுக்கும் பேச்சுக்கான அழைப்பை நேபாள அரசு ஏற்றுக்கொள்வதாயின கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவேண்டும் என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமரும், நேபாள காங்கிரஸ் தலைவருமான கிரியா பிரசாத் கொய்ராலா கேட்டுள்ளார்.

இது குறித்து நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியில் அவர் கூறியதாவது:-

நேபாளத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் பேச்சில் கலந்து கொள்ள வேண்டுமென மாவேயிஸ்டுக்கள் அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால், கடந்த இரு மாதங்களுக்கு முன் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்திற்கு புத்துயிர் அளித்தால்தான் பேச்சு நடத்துவதற்கு வழியேற்படும்.

எதிர்காலத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாத அமைப்பை அரசியல் ரீதியாக சட்ட ரீதியிலான அமைப்பாக அங்கீகரிக்கும் சூழ்நிலை ஏற்படவும் இது உதவும்.

மாவோயிஸ்ட்டுக்களின் அழைப்பை உண்மைத் தன்மையாக ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்களின் அழைப்பிற்கிணங்க, அனைத்துக் கட்சிகளையும் பேச்சில் ஈடுபடுத்த முயலும் அரசு, கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஏன் கூட்டக் கூடாது? அப்போதுதான் நேபாள மன்னரும் நாடாளுமன்றமும் இணைந்து பேச்சு நடத்த முடியும் - என்று கூறினார்.

உலக அரங்கில்

## இராமாயண பாராயணம் 3 பெண்கள் சாதனை

இந்து இதிகாசமான இராமாயணத்தை ஆண்கள் மட்டுமே பாராயணம் செய்வது வழக்கம். ஆனால், முதன்முறையாக மூன்று பெண்கள் பாராயணம் செய்து சாதனை படைத்திருக்கின்றனர்.

அமெரிக்காவுக்கு அருகில் உள்ள டிரினிடாட் - டுபாகோ நாட்டைச் சேர்ந்த மாயாந்தி மகராஜ், கீதா ராம்சிங், சகுந்தலா ஜங்கபகதூர் என்ற மூவரும இச்சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இந்து பிரசாரகேந்திரம் என்ற அமைப்பு 9ஆவது ஆண்டாக துளசி தாசர் பிறந்த நாளைக் கோலாகலமாக நடத்தியது.

அதையொட்டி, நடைபெற்ற இராமாயண யாகத்தில் 5 இரவுகளும் இராமாயணப் பாராயணத்தை மூன்று பெண்களும் வெற்றிகரமாக முடித்தனர்.

# ஓரினச்சேர்க்கையாளர் ஆயராவதா? உலகளாவிய ரீதியில் கண்டனங்கள்!

இரண்டு குழந்தைகளுக்கு தந்தையானபின் மனைவியை விவாகரத்து செய்த ஓரினச்சேர்க்கையாளர் ரொபின்சனை, அங்கிலிக்கன் ஆயராக நியமித்ததற்கு உலகளாவிய ரீதியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

மனைவியை விவாகரத்து செய்தபின் கடந்த 14 ஆண்டுகளாக ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டு வரும் அமெரிக்கரான இவர், எவ்விதத்திலும் ஆயராக தகுதியற்றவர் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அமெரிக்காவில் உள்ள ஓரினச்சேர்க்கையாளர்கள், ரொபின்சன ஆயராக நியமிக்கப்பட்டிருப்பது தம்மை 'மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று கூறியுள்ளனர். ஓரினச்சேர்க்கையாளர் ஒருவரை ஆயராக நியமித்திருப்பதற்கு கத்தோலிக்க திருச்சபையும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தனக்கு எதிராக கிளம்பும் அபிப்பிராயங்களைப் பற்றி கவலைப்படாத இவர், ஆண் ஓரினச்சேர்க்கையாளர், பெண் ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு நல்ல ஆயராக இருந்து நிறைய உதவிகளைச் செய்யவுள்ளேன் என்று கூறியுள்ளார்.

# சதாமின் சொந்த ஊரில் 80 பொது மக்கள் கைது!

பக்தாத், ஓக.6

பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை அவரது சொந்த ஊரில் சல்லடை போட்டு தேடிவரும் அமெரிக்கப்படையினர் கடந்த 24 மணித்தியாலத்தில் எண்பதுக்கும் மேற்பட்டோரை கைதுசெய்துள்ளனர். அங்கு தேடுதல்களும், கைதுகளும் தொடர்கின்றன.

தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் படி சதாம் ஹுசைன் அவரது சொந்த ஊரான திக்ரித்திலேயே தலைமறைவு வாழ்க்கையை நட்த்தி வருகிறார் என்று கூறும் அமெரிக்கப் படையினர், நேற்றுமுன்தினம் முதல் அங்கு தொடர் தேடுதல்களை நடத்தி வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான படையினர் ஈடுபட்டுள்ள இந்தத் தேடுதலின்போது சதாமுக்கு நெருக்கமானவர்கள், சந்தேகத்திற்கிடமானோர், பாத்கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட எண்பதுக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஈரான்குழு ஈராக்கில்

இதற்கிடையே -

ஈரான் வெளிநாட்டு அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று ஈராக் விரைந்துள்ளது.

அங்கு, இடைக்கால ஆட்சிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரதிநிதி போல் பிறீமருடன் இக்குழு சந்திப்பை நடத்தியிருக்கிறது.

போருக்குப் பின்னர் ஈராக் விவகாரங்களில் ஈரானைத் தலையிட வேண்டாமென அமெரிக்கா கோரி வந்த நிலையிலேயே, மேற்படி குழு ஈராக் விரைந்திருக்கிறது.

ஈராக்கின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு அங்கு தமது குழு சென்றுள்ளதாக ஈரானிய அரசு அறிவித்திருக்கிறது.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையில் நீண்ட நாளாக இருந்துவரும் பகையுணர்வு இந்த குழுவினரின் நல்லெண்ண விஜயத்தை அடுத்து குறைய வாய்ப்பிருக்கிறது என்று இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இந்தோனேசிய ஹோட்டலில் குண்டு வெடிப்பு; 10 பேர் பலி!

ஜகார்த்தா,ஓக.6

இந்தோனேசிய தலைநகரில் உள்ள வெளிநாட்டினர் அதிகமாகத தங்கும் ஹோட்டல் ஒன்றில் நேற்றுக் காலை சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் பத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மேலும் 110 பேர் காயமடைந்தனர்.

ஹோட்டலுக்கு முன்புறமாக நின்ற கார் ஒன்றில் இருந்த குண்டே வெடித்தது என்றும், இது தற்கொலைத் தாக்குதலாக இருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடித்த இடத்திற்கு உடனடியாக எவரும் அனுமதிக்கப்படவில்லை. பொலீஸாரும் மீட்புப் படையினரும் மட்டுமே அங்கு நிற்கின்றனர் என்று இணையத்தள செய்திகள் கூறுகின்றன.

தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள ஹோட்டலின் முன்புறமாக மக்கள் குழுமியிருந்த வேளையிலேயே குண்டுவெடித்தது. இதில் வெளிநாட்டவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

குண்டுவெடிப்பை அறிந்ததும், ஏராளமானோர் அங்கு கூடினர். ஆனால் தடைகளை அமைத்து பொலீஸார் அவர்களை ஹோட்டலினுள் நுழைய விடாது தடுத்துள்ளனர்.

கடந்த வருடம் பாலிதீவில் நடந்த குண்டுவெடிப்பு விசாரணைகள் நடைபெற்றுவரும் வேளையில் இந்தக் குண்டு வெடித்துள்ளதால், இவவிரு தாக்குதல்களுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தாக்குதலைத் தொடரப்போவதாக பலஸ்தீனப் போராளிகள் எச்சரிக்கை

ரமல்லா,ஓக.6

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்துடன் தொடர்புடைய போராளிகள் சமாதானத் திட்டத்தை நிராகரித்து இஸ்ரேல் மீதான தாக்குதல்களை மீண்டும் தொடரப்போவதாக அச்சுறுத்தியுள்ளனர்.

அரபாத் மீதும் இவர்கள் வெறுப்படைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

ரமல்லாவிலுள்ள அரபாத்தின் தலைமைச் செயலகத்தில் அடைக்கலம் புகுந்துள்ள அல்-அக்ஷா மாவீரர் படையணியைச் சேர்ந்த இருபது போராளிகளை பலஸ்தீனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஜெரிக்கோ சிறையில் அடைக்க வேண்டும் என்று இஸ்ரேல், பலஸ்தீன பிரதமரிடம் கோரியிருந்தது.

ஆனால், இது குறித்து இன்னமும் தீர்மானம் எட்டப்படவில்லை என்று பலஸ்தீன அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலின் இந்தக் கோரிக்கை குறித்து அல்-அக்ஷா போராளிகள் கூறுகையில், அரபாத் எங்களை விற்று விட்டார். நாம் ஏமாந்து விட்டோம். அரபாத் சியோனிஸ்டுகளிடமும், அமெரிக்கர்களிடமும் அடிபணிந்து விட்டார் - என்று தெரிவித்துள்ளனர்.

இதுவே மீண்டும் தாக்குதல்களை போராளிகள் தொடரப்போவதாக எச்சரித்தமைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. (ம)

# இராணுவ வாகனம் வெடித்துச் சிதறியதால் ஆப்கானில் 13 பேர் பலி; 21 பேர் காயம்!

காபூல்,ஓக.6

ஆப்கானிஸ்தானில் லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட ஆயுதங்கள், திடீரென்று வெடித்துச் சிதறியதால், 13 இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர்; 21பேர் காயமடைந்தனர்.

தலிபான் போராளிகளிடமும் கொள்ளையர்களிடமும் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட இந்த ஆயுதங்களை ஜாவஸ்கான் என்ற இடத்திலிருந்து தலைநகர் காபூல் நோக்கி எடுத்துச்சென்றபோதே அவை வெடித்துச் சிதறின. வெடித்துச் சிதறிய லொறியில் 800 துப்பாக்கிகளும், பீரங்கிக் குண்டுகளும், எறிகணைகளும் இருந்தன என்று ஆப்கானிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 21 பேரில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று காபூல் வைத்தியசாலை கூறியுள்ளது.

இதனால், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறுகையில், இது ஒரு விபத்துத்தான், தலிபான்களின் தாக்குதல் எதுவும் கிடையாது. இருப்பினும், ஆயுதங்கள் வெடித்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது - என்றார்.

இதற்கிடையே -

தலிபான்கள் 'ஜிகாத்' என்னும் புனிதப்போருக்கு எதிரான மதத் தலைவர்களைக் கொல்ல முடிவு செய்துள்ளனர் என நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் பத்திரிகை கூறியுள்ளது.

இது குறித்து அந்தப் பத்திரிகையில் கூறியிருப்பதாவது:-

தலிபான்கள் கடந்த மாதம் வரை ஆப்கான் படையினர், வெளிநாட்டு இராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடத்தினர். ஆனால், தற்போது தங்கள் நிலையை மாற்றிக் கொண்டு விட்டனர். அவர்கள் சமீபகாலமாக, 'ஜிகாத்' என்னும் புனிதப்போருக்கு எதிரான முஸ்லிம் மதத்தலைவர்களைக் கொன்று வருகின்றனர். அவர்கள் இதுவரை 5 முஸ்லிம் மதத்தலை வர்களைக் கொன்றுள்ளனர். கடந்த வாரம் இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி இரண்டு பேரை தலிபான்கள் கொன்றனர். ஆப்கானின் தெற்குப் பகுதியில் தலிபான்களின் நடவடிக்கைகள் தொடர்வதால் இப்பகுதி மக்கள் பீதிகுள்ளாகியுள்ளனர் - என்றுள்ளது.

# யுவதியிடம் சேஷ்டை புரிந்தவருக்கு பாடம் புகட்டிய வளர்ப்பு நாய்

பெண் ஒருவரை மானபங்கப்படுத்த முயன்றவரின் ஆணுறுப்பை நாய் கடித்துக் குதறிய சம்பவம் குரோஷியாவில் நடந்துள்ளது.

குரோஷியா நாட்டின் தலைநகரம் ஜாக்ரொப்பை சேர்ந்த 36 வயது ஆசாமி ஒருவர் குடிபோதையில் தள்ளாடியபடி வீதியில் வந்தார். வீட்டுக்கு வரும் வழியில் அழகிய பெண் ஒருத்தியைக் கண்டார். போதை தலைகேறிய நிலையில் அந்தப் பெண்ணை அவர் மானபங்கப்படுத்த முயன்றார். இதனைக் கண்ட அப்பெண்ணின் வளர்ப்பு நாய் அங்கே ஓடோடி வந்து அவரது அந்தரங்க உறுப்பைக் கடித்தது.

தற்போது அந்த நபர் மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம)

## 31ஆம் நாள் நினைவாக....

மலர்வு 18 - 04 - 1940



உதிர்வு 07 - 07 - 2003

### அமரர் வைரமுத்து செல்வரத்தினம்

(மறவன்புலோ)

*அல்லும் பகலும் பாடுபட்டு எம்நல்வாழ்வுக்காய்*
*நீர் உழைத்தீர்! மாதங்கள் போனாலும் மனதினிலே நிலைத்திருப்பீர்.*

இன்று (06.08.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*34/4, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

- குடும்பத்தினர்.

(21005) (26-24-11-15)

## நெஞ்சம் உருகும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னையின் மடியில் 13 - 08 - 1964



இறைவன் பாதாரவிந்தத்தில் 07 - 07 - 2003

### அமரர் தர்மலிங்கம் ஜெகதீஸ்வரன்

(பார ஊர்தி உரிமையாளர்)

அன்போடு பேசும் அழகுமுகம் மறைந்ததோ?
என்று இனிக் காண்போம் உங்கள் திருமுகத்தை?
இன்று உங்களை நினைந்தே இதய அஞ்சலி செலுத்துகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.08.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிலம்புப்புளியடி,*
*சங்கானை.* (21081) (26-24-11-15)

- க. தர்மலிங்கம் (தந்தை).

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 - 03 - 1950



மறைவு 07 - 07 - 2003

அமரத்துவ அன்னை

### திருமதி தவமணி திருநாமச்சந்திரன்

அணைந்தும் அணையாத தீபமான எம் அன்புத் தெய்வமே!
மாதம் ஒன்று சென்றும் உம் நினைவலைகள் மாறவில்லையே!
அன்புக்கோர் இருப்பிடமாய் பண்புக்கோர் பொக்கிஷமாய்
குடும்பத்தோடும் உற்றார், உறவினரோடும் வாழ்ந்து காட்டிய
அன்னையே! காலமெல்லாம் உங்கள் நினைவோடு
வாழ்வோம் அம்மா.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவையொட்டி எமது இல்லம் வந்து அஞ்சலியும் ஆறுதலும் செலுத்திய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*"சந்திர வாசா",*
*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

- குடும்பத்தினர்.

(21086)(27-24-11-15)

## சிறுவர்தின கட்டுரைப் போட்டிகள்

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு இடையே கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

'சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுத்தல்' என்னும் கருப்பொருளை மையமாக வைத்து சிறுவர் உரிமைகள், அவற்றைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக கட்டுரைகள் அமையவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகள் நான்கு பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. தரம் 4-5 முதலாவது பிரிவாகவும், தரம் 6-9 இரண்டாவது பிரிவாகவும் தரம் 10-11 மூன்றாவது பிரிவாகவும் தரம் 12-13 நான்காவது பிரிவாகவும் போட்டிகளில் பங்கு கொள்ளலாம். (ம-10-72)

## சரஸ்வதி சிலை கோப்பாயில் திறப்பு

வலிகாமம்தெற்கு, ஓக.6

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வாசலில் மிகப் பிரமாண்டமான சரஸ்வதி சிலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சிலையினை மேற்படி கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவரான செ.செந்தில்வேல் உருவாக்கம் செய்திருந்தார்.

ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி கல்வித்தாயின் சிலையைத் திறந்துவைத்தார்.(எ-152)

## கசிப்பு வழக்கில் ரூ.12 ஆயிரம் அபராதம்

32 லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிவான் 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை பகீரதன் என்பவருக்கு எதிராக சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மேற்படி அபராதத் தொகையினை விதித்த நீதிவான் அபராதத் தொகையினைச் செலுத்தத் தவறின் ஆறுமாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (எ-117)


## வெதுப்பகம் விற்பனைக்கு

உடுவில் மல்வம் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாகவும் மக்கள் குடியிருப்புகள் நெருக்கமாகவும் உள்ள பகுதியிலிருக்கும் மல்வம் வெதுப்பகம் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
செ.செல்வராசா
மே/பா மகேந்திரன்
லவ் லேன், உடுவில்.
(20989) (24-11-15)

## பணிப்பெண் தேவை

ஓய்வுபெற்ற கணவன், மனைவி ஆகியோருக்குச் சமைக்கவும் வீட்டு வேலைகள் செய்யவும் பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
ச.தெ.மூர்த்தி,
551, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(21082) (24-11-15)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 05 - 1928



மறைவு 18 - 07 - 2002

### திருமதி சதாசிவம் யோகம்மா

திதி: 06.08.2003

எம் எண்ணமலர்ப் பொய்கையில்
என்றென்றும் பவனிவரும் அன்னையே!
ஆண்டொன்று மறைந்தாலும் - உன் நினைவு
எமை விட்டு அகலாது.

(21088) (24-11-15)

*"மேழிச்செல்வம்"*
*மடத்தடி வீதி, சாவகச்சேரி.*

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர்க் காணிக்கை

மண்ணில் 03 - 09 - 1962



விண்ணில் 02 - 08 - 2003

எமது சக உத்தியோகத்தர்

### திருமதி மகாதேவன் ஜெயமாலா

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடையும் வேளையில் அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம்.

*வலி. தெற்கு பிரதேச சபை,*
*சுன்னாகம்.*

(21070) (19-24-11-5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 - 08 - 1933



மறைவு 07 - 07 - 2003

திருமதி

### ஆறுப்பிள்ளை செல்லமுத்து

திதி: 06.08.2003 புதன்கிழமை

*அன்புடனும் பாசத்துடனும் எங்களைப் பெற்று வளர்த்த - தெய்வமே!*
*ஆசையுடன் எங்களைப் பேணிக் காத்தீர்கள்.*
*இன்று எங்களையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?*
*ஈசனடி சேர வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.*

நிரந்தரமுகவரி:
*நகுலேஸ்வரா வீதி,*
*கீரிமலை.*

த. முகவரி:
*காயா வீதி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(21075)(27-24-11-5)



## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி தம்பிராசா சர்விழி (கிளி)

திதி: பூர்வபட்ச நவமி

மண்ணில் 19 - 07 - 1982

விண்ணில் 06 - 08 - 1992

*அன்பின் கிளியே! நீர் எம்மைவிட்டு*
*பறந்து சென்று 11 ஆண்டுகளாகிவிட்டன*
*ஆனால் நம்பமுடியவில்லை எம் அன்பு*
*வார்த்தைகளால் கிளி! கிளி! என்று அழைத்தோமே*
*ஆனால் உண்மையில் நீர் எம்மைவிட்டு பறந்தாசென்றீர்?*
*நாம் என்றும் உம் நினைவால் தடுமாறுகின்றோம்.*
*உள்ளம் குமுறுகின்றோம் உம்முடன் பழகிய*
*இனிய நாள்கள் இன்றும் எம்மை வாட்டுகின்றன.*
*பிறப்பவர்கள் இறப்பது திண்ணம், ஆனால் இந்*
*பாலவயதில் காலன் உம்மை திடீரென அழைத்துச் சென்றது ஏனோ?*

இந்தநினைவுதினத்தில் உமது ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வமான சாளம்பை முருகனை இறைஞ்சுகின்றோம்.

*கோட்டைக்காடு, மல்லாகம்.*
(21079) (24-11-15)

- அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார்.

உதயன்

## மீண்டும் முருங்கையில் ஏறுகின்றது வேதாளம்

இலங்கையில் கடந்த ஐந்து தசாப்த காலமாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட சமயங்களிலெல்லாம் அவற்றை தடுத்துக் குழப்புவதற்கு தெற்கில் பேரினவாத சக்திகள் ஒன்று திரண்டு கிளம்பிவந்திருக்கின்றன. இதுதான் இலங்கையின் கடந்தகால சரித்திரம். நாட்டின் மிகமோசமான அவல நிலைக்கும் இதுவே முக்கிய காரணி.

சிங்களப் பேரினவாதம் தமிழினத்தை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தியதன் விளைவே கொடூர இனப்போராக வெடித்து நாட்டின் எதிர்காலத்தை இருள வைத்து கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அந்த இருளிலிருந்து நாட்டை விடுவித்து, சமாதான ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, அமைதி வெளிச்சத்தைப் பரப்பி, நாட்டிற்கு சுபீட்சமான எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் திரும்பவும் இப்போது முனைப்பாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சமயத்தில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதுபோல பேரினவாத சக்திகள் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு எதிராக ஒன்றுதிரளத் தொடங்கியுள்ளன.

மிகமுக்கிய பௌத்த தேரர்கள் பலரை உள்ளடக்கிய தேசிய சங்க சம்மேளனம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாடும் இனவாதம் கிளம்பும் வகையில் அங்கு ஒலித்த கருத்துக்களும் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு எதிராக சிங்களப் பேரினவாதம் ஒன்று திரளத் தொடங்கி விட்டது என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. அங்கு வெளியிடப்பட்ட கருத்துக்களில் முக்கியமானவை இவைதான்:-

★ அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி புலிகள் தங்களை இராணுவ ரீதியாகவும், ஆயுத தளபாட வசதிகள் ரீதியாகவும், நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியாகவும், சர்வதேச மட்டத்திலும் ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளனர்; பலப்படுத்திக் கொண்டுள்ளனர்.

★ நாட்டின் நகரங்களைத் தாக்கி அழிக்கும் திட்டங்களைப் புலிகளின் தலைவர் தயாரித்து அதற்கான இடங்களில் ஆள்களையும் நிறுத்தியுள்ளார். அவரின் உத்தரவு கிடைத்ததும் தாக்குதல்கள் ஆரம்பமாகும். அத்தகைய ஆபத்தான நிலைக்குள் நாட்டை அரசு தள்ளிவிட்டுள்ளது.

★ தமிழீழத்தை உருவாக்கவும் நாட்டை முற்றாகப் புலிகளுக்குத் தாரைவார்க்கவும் திட்டப்படுகின்ற திட்டங்களுக்கு ஐ.தே.முன்னணி அரசு துணை போகின்றது.

★ இடைக்கால நிர்வாகம் என்ற கட்டமைப்புமூலம் தமிழீழத்துக்கான பாதையை அரசு திறந்து விட்டிருக்கின்றது.

★ பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் நம்பிக்கை இல்லை. எனினும், சுதந்திரக் கட்சியில் தேசப்பற்று உள்ளவர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் ஜே.வி.பி. மற்றும் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., அதாவுல்லா அணி, சிஹல உறுமய ஆகியவற்றைச் சேர்ந்தோரையும் ஓரணியில் திரட்டி இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்கும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவோம்.

- இந்தப் பாணியிலேயே அக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அஹிம்சை, அமைதி, சமாதானம், ஜீவகாருண்யம் என்பவற்றை வலியுறுத்திய கௌதம புத்தரின் போதனைகளை மக்களுக்குப் போதிக்கும் மூத்த பௌத்த தேரர் ஒருவர், சமாதானப் பேச்சை நிறுத்தி யுத்தத்துக்குத் தயாராகவேண்டும் என்று அங்கு சங்கநாதம் எழுப்பியிருக்கின்றார். நாட்டைக் காக்க இரத்தம் சிந்தவும், உயிர்த்தியாகம் செய்யவும் தயாராகும்படி சிங்கள இளைஞர்களுக்கு அவர் அழைப்பும் விடுத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு, சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே இணக்கமான அமைதித் தீர்வு ஏற்படுவதை சிங்களப் பேரினவாத சக்திகள் அனுமதிக்கப்போவதில்லை என்பதையே இக்கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அமைதித் தீர்வுக்கான அவசியத்தையும் அதை எட்டுவதற்கு தற்போது ஏற்பட்டுள்ள வாய்ப்பான நிலையையும் நாட்டுமக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இது கடைசி பஸ். இதைத் தவறவிடுவோமேயானால் விளைவு விபரீதமாகும்.

இனவாதக் கூச்சல்களை ஒரேயடியாக ஒதுக்கி விட்டு, விட்டுக்கொடுப்புகளுடனான அமைதித் தீர்வுக்கு துணிச்சலோடு நாடும் மக்களும் தம்மை முற்றாகத் தயார் செய்துகொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு, இனவாத சக்திகளின் தவறான வழிகாட்டுதலுக்கு துணைபோனால் இனப்பிரச்சினை என்ற சகதியில் இருந்து நாடும் மக்களும் மீளமுடியாமல் போய்விடும்.

எனவே, யாருக்குத் துணிவோடு துணை போவது என்பதை முடிவெடுக்க வேண்டிய இறுதிக் கட்டத்தில் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களின் உறுதியான தீர்மானத்தில்தான் நாட்டின் எதிர்கால சுபீட்சம் தங்கி உள்ளது.

# சுதேச மருத்துவத்தை வளர்ப்பது பற்றி ஆராய 7 பேர் கொண்ட குழு நியமிப்பு

சுதேசிய வைத்திய முறைகளை வளர்ப்பதற்காக தேசிய வைத்திய இடர் நிவாரண அமைச்சு 7பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

இநதக் குழு சுதேசிய வைத்தியத்துறை தொடர்பான நிரந்தரக் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான சிபாரிசுகளை முன்வைக்க உள்ளது.

தேசிய வைத்திய இடர் நிவாரண அமைச்சு கொள்ளுப்பிட்டியிலிருந்து கொம்பனித்தெரு யூனியன் பிளேஸுக்கு இடமாற்றப்பட்ட போது, அங்கு உரையாற்றிய அமைச்சர் இந்தக் குழு நியமிக்கப்பட்ட விடயத்தை தெரிவித்தார்.

பி.ஜே.புஞ்சிஹேவாவைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் பேராசிரியர் ரியூலி த சில்வா, பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி, ஆயுர் வேத வைத்தியர் ஜே.டி.கருணாதாச, ஆயுர்வேத வைத்தியர், கே.சாயக்கார, யுனானி வைத்தியர் பி.எம்.நஜீப், கலாநிதி தேவப்பிரிய நுகவெல ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவினர் பின்வரும் விடயங்களை ஆராய்ந்து அமைச்சுக்கு தமது சிபாரிசுகளை வழங்குவார்கள்.

சுதேச வைத்திய முறையையும், அதன் அபிவிருத்தியையும் முன்னேற்றமடையச் செய்வதற்கான தேசிய சுகாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்குதல்.

தேசிய மருத்துவ முறைகளான ஆயுர்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யூனானி மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் ஆகியவற்றை அபிவிருத்தியடையச் செய்வதற்கான வழிமுறைகளையும் திட்டங்களையும் சிபார்சு செய்தல்.

அது சம்பந்தமாக பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவ சிகிச்சை முறைகளை பாதுகாத்தலும் மேலும் முன்னேற்றமடையச் செய்தலும்

பரம்பரை வைத்தியர்கள் மற்றும் ஆயுர்வேத சாஸ்திரி பட்டப்படிப்பிற்கான துறைசார்ந்த ஞானத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சுதேச மருத்துவ முறைசார்ந்த சிகிச்சைகளைப் பெறும் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் சுகாதார தேவைகளை வழங்குவதற்கும் அதனை அபிவிருத்தியடையச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்தல்.

சுதேச மருத்துவர்கள் மற்றும் அத்துறை சார்ந்தவர்களின் அடிப்படை வசதிகள், உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்தல்.

சுதேச வைத்திய முறைப்படி ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கும் அது சம்பந்தமான கல்வி மற்றும் தேவையான அம்சங்களை முன்னேற்றுவதற்குமான வழிவகைகளைச் சீராக்குதல்.

மூலிகை உற்பத்தி, அவற்றின் பாதுகாப்பு, அவற்றைப் பாவித்தல் சம்பந்தமான செயற்பாடுகள்.

தரமான சுதேச மருந்துகளை உற்பத்தி செய்தல், அவற்றை தரக்கட்டுப்பாட்டிற்கமைய தயாரித்தலும் அவ்வாறு தயாரிக்கப்படும் மருந்து செய் நிறுவனங்களைப் பதிவு செய்தலும்.

மேற்படி சுதேச மருந்துகள் தயாரிக்கும் நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

சுதேச மருத்துவ முறைகளைப் பாதிக்கும் விளம்பரங்களை கட்டுப்படுத்த விதிமுறை சிபார்சு செய்தல்.

மற்றும் முக்கியமானதெனக் கருதப்படும் விடயங்கள் பற்றி ஆராய்தல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக சுதேச மருத்துவர்கள், அபிமானிகள், கல்விமான்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களை எழுத்துமூலம் குழுவின் தலைவருக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மடு ஆலய வீதி பற்றிய செய்தியை மன்னார் ஆயர் மறுக்கின்றார்

யாழ்ப்பாணம்,ஓக.6

'மடுமாதா ஆலயம் செல்லும் வீதியை மூடுவது பெரும் மனித உரிமை மீறல் - மன்னார் ஆயர் தெரிவிப்பு' என்னும் தலைப்பில் கடந்த மாதம் 19ஆம் திகதி உதயனின் கடைசிப் பக்கத்தில் வெளியாகிய செய்தியை ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை மறுத்திருக்கின்றார்.

மன்னார் மடுமாதா ஆலய உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது போன்ற கருத்து எதனையும் தான் தெரிவிக்கவில்லை என்றும் ஆயர் கூறியிருக்கின்றார்.

இதேவேளை - பிரஸ்தாப செய்தி தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்னவும் உதயனுக்கு விளக்கக் குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கான மார்க்கங்களாக ஓமந்தை மற்றும் உயிலங்குளம் ஆகிய பாதைகளே உள்ளன.

மடு தேவாலயத்துக்குச் செல்லும் வீதி மடு யாத்திரை செல்லும் பக்தர்களுக்காக மட்டுமே திறக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பாதையை சாதாரணமாக பொதுக்களின் போக்குவரத்துக்கு மூடிவைப்பது பெரும் மனித உரிமை மீறல் என்று வெளியான செய்தி தவறாகும். உதயனில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்ற கருத்தை தான் கூறவில்லை என்று மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் வன்னி பாதுகாப்புத் தலைமையகத்துக்குத் தெரிவித்திருக்கிறார். மன்னார் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், செய்தியில் கூறப்பட்டது போன்ற கருத்துக்கள் எவையும் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்றும் ஆயர் கூறியிருக்கின்றார்.

- இவ்வாறு பிரிகேடியர் சனத் கருணரட்ன தெரிவித்திருக்கிறார். (ஐ)

# கறுப்பு ஜூலை நினைவு நாளை விடுமுறை தினமாக அறிவியுங்கள்

## மனிதநேய அமைப்புகள் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஓக.6

கறுப்பு ஜூலைக் கலவரம் நடைபெற்ற 24 ஆம் திகதியைத் தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தி அத்தினத்தை இறந்தவர்களின் பிரார்த்தனை தினமாகவும் அறிவிக்க வேண்டும்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலை போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக்கூடாதென வலியுறுத்தி யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலைக் கலவரம் ஏற்பட்டு இவவாண்டுடன் 20 வருடங்கள் நிறைவுறுகின்றன. இக்கலவரம் அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொலைக் குற்றமாகவே கருதப்படுகின்றது.

1981ஆம் ஆண்டுமுதல் 1984ஆம் ஆண்டுவரை நடைபெற்ற இனக் கலவரங்களை ஆராய்வதற்கு 'ஜனாதிபதியின் உண்மைக்கான ஆணைக்குழு' ஏற்படுத்தப்படவுள்ளதை நாம் பாராட்டுகின்றோம்.

இந்த ஆணைக்குழுவின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான சிபாரிசுகளைச் செய்யவேண்டும். ஜனாதிபதி நிதியத்துடன் சர்வதேச நாடுகள் கொடுப்பதற்கு முன்வரும் நிதியின் ஒருபகுதியையும் சேர்த்துக் கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் படையினர் செய்யும் குற்றங்களுக்கு அரசின் பாதுகாப்புக் கிடைப்பதற்கு வழி செய்கின்றது. இதன்மூலம் படையினர் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடுகின்றனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை 25ஆம், 27ஆம் திகதிகளில் வெலிக்கடைச் சிறையில் நடந்த தமிழ்க் கைதிகளின் படுகொலை அழிக்கமுடியாத ஓர் அவமானத்தையும், அரசின் எதேச்சாதிகாரத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவம் மீண்டும் ஏற்படக்கூடாதென்பது எமது வேண்டுகோள்.

சமாதானத்திற்கான போர் என்று போர்வையில் இந்த நாட்டில் மோசமான அராஜகங்கள் நடந்தேறியுள்ளன. இவற்றிற்குப் பொறுப்பாக இருந்த அரசு கண்டிக்கப்படவேண்டியது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் நாட்டில் தற்போது காணப்படும் அமைதிக்கு அரசினாலோ அல்லது வேறுவிதமான வன்முறைக் கும்பல்களினாலோ பாதிப்பு ஏற்பட்டால் அவை நாட்டில் பேராபத்தை உண்டாக்கும்.

அரசாங்கத்தினால் உண்மைக்கும் நட்புக்குமான ஆணைக்குழு ஒன்று விரைவில் உருவாக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் இனங்களுக்கிடையேயான நம்பிக்கையையும் நட்பையும் வளர்க்கமுடியும். அத்துடன் கலவரம் நடந்த ஜூலை 24ஆம் திகதியை விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தி அத்தினத்தை இறந்தவர்களின் பிரார்த்தனை தினமாகவும் அறிவிக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர் மற்றும் அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ம-8)

| நாளை |
|---|
| ஆடி 22 |
| வியாழக்கிழமை |
| (07.08.2003) |
| திதி : தசமி |
| முன்னிரவு 7.13 வரை |
| நட்சத்திரம: அனுஷம் |
| பிற்பகல் 12.57 வரை |
| சுபநேரம்: 7.44 - 9.04 |
| ராகுகாலம்: 1.34 - 3.04 |
| (பழைய நேரப்படி) |

**உதயவாக்கு**

கனமான பையும் இலேசான இதயமும் அதிகம் தாங்கக் கூடியவை.

# யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவை நேற்றையதினம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ். மாவட்ட மட்டத்துக்கான தமிழீழ எழுச்சிப் பேரவை நேற்றையதினம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே கிராம, பிரதேச, கோட்ட மட்டத்தில் தெரிவான நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள், யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ். நல்லூர், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய 5 கோட்டங்களிலிருந்தும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட எழுச்சிப்பேரவையின் மாவட்டச் செயலாளராக சொலமன் சூ.சிறில் தெரிவுசெய்யப்பட்டார்.


துணைச் செயலாளராக தென்மராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த கே.சந்திரசேகரமும், பொருளாளராக வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த த.முகுந்தனும் தெரிவானார்கள்.

அத்துடன் பிரதேச, துறை சார்ந்த பிரிவுகளுக்கென 25 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (ம-173)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

06 - 08 - 2003

HAPPY BIRTHDAY



பிரான்ஸில் வசிக்கும் நிக்ஷன் - றொசாறியா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### கனிஸ்ரன் (நிறோன்)

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (06.08.02003)புதன்கிழமை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்புடன் கொண்டாடுகின்றார். கனிஸ்ரனை அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்திமார், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், யாழ்ப் பாணத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்தி, மாமாமார் மற்றும் பூட்டி ஆகியோர் குழந்தை இயேசுவின் துணைகொண்டு, சீருஞ்சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

திரு.திருமதி ஜேம்ஸ்.

222, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (21050) (21-24-15-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி கல்வி வலயத்தில்
ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும்
உடுப்பிட்டியைச் சேர்ந்த
**உயர்திரு. கொ.குணசிங்கம்**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளதை யிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் பணி மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம்.

– ஆசிரிய ஆலோசகர்கள்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்,
புலோலி. (சி-29295)(21-15-19)

## கண்ணீர்ப் பூக்கள்

மலர்வு 03 - 09 - 1962

உதிர்வு 02 - 08 - 2003



வலி. தெற்கு பிரதேச சபை சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரியும், எமது ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் ஆகிய

### திருமதி ஜெயமாலா மகாதேவன்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடையும் வேளையில் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

...வே! மதிநுட்ப மானிடமே
மாசற்ற மாமணி விளக்கே
மானிடம் போற்றும் குணக்குன்றே
மாதவன் மனம் கவர்ந்த மனையாளே
மக்கள் மூவர் மதிமயங்க
மணாளன் தன் நிலை குலைய
மண் விட்டுச் சென்றாயோ?
மனம் குமுறி நிற்கின்றோம்
பிணி என்று காட்டாமல்
பிள்ளையாய் நீ திரிந்தாய்
பிரதேசம் கலங்குதம்மா
பிதற்றுகின்றோம் உன் பிரிவால்
பிரிவென்பது இதுவென்றால்
பிறவியே வேண்டாமம்மா
பிறவியொன்று இனி உண்டெனில்
பிரதேச சபைக்கே வாம்மா.

வீடிருக்க த...ிருக்க வேண்டும் மனையாள் இருக்க
பீடிருக்க ஊன் இருக்க பிள்ளைகளும் தாமிருக்க
மாடிருக்க கன்று இருக்க வைத்த பொருள் தாமிருக்க
கூடிருக்க நீ போன கோலமென்ன கோலமோ?

(21069) (24-21-19-15)

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

## கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.6

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிவில் பின்வரும் தினங்களில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன என்றும் -

பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் -

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார்.

*இன்று புதன்கிழமை காலை 8 மணிமுதல் 4 மணிவரை யாழ்ப் பாணக் கல்லூரியை அண்டிய பகுதிகள்.

*நாளை வியாழக்கிழமை சங் கரத்தைச் சந்தை அதனை அண் டிய பகுதிகள்.

(எ)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.6

நெல்லியடிப் பிரதேசத்தில் கட் டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் இன்று புதன்கிழமை நஞ்சூட்டி அழிக் கப்படவுள்ளன.

நெல்லியடி நகரப்பகுதி, வதிரிச் சந்தி, இராசகிராமம், ஞானாசாரி யார் வீதி ஆகிய பகுதிகளிலேயே கட்டாக்கலி நாய்கள் அழிக்கப்பட வுள்ளதால், வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறு பொதுச்சுகாதார பரிசோதகர் க.இளங்கோ அறிவுறுத்தி யுள்ளார்.

(எ-10)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பெரிய மாடி வீடு 8பெரிய அறைகளும், 2பெரிய ஹோல்களும், 2சமையல் அறைகளும், 4 மலசலகூடங்களும், 2குளியலறைகளும், ஒரு வெளி மலசலகூடமும், ஒரு வெளி குளியலறையும், போதியளவு பெரிய வாகனங்கள் நிறுத்தும் இடமும் வாடகைக்கு விடப்படும். N.G.OS விரும்பத்தக்கது.

தொடர்பு:
86, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
Tel: 0712- 307723, E.mail: Karuvel 2003 @ Yahoo.co.UK

(21010) ★ இரு தனி வீடுகளாகவும் பாவிக்கலாம். (21-15-19-27)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவரும்,
யாழ். மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் பொருளாளரும்,
சண்றாஜ் கொம்பிளெக்ஸ் உரிமையாளரும்,
சிறந்த சமூக சேவையாளருமான

திருமிகு
### நடராசா சண்முகவேல்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு மன மகிழ்வுறுவதுடன், அவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

- நாகம்ஸ் உரிமையாளர்.

சுன்னாகம்.

(சி-29308)(21-19-15)

## திருமண அழைப்பு

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்
யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் சங்.46:11

அன்புடையீர்!

நிகழும் 2003ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை (16-08-2003) பிற்பகல் 3.00 மணிக்கு

எமது புதல்வன் **றுதன்** அவர்களுக்கும்



எமது புதல்வி **கிறிஸ்டீன் கீதாஞ்சலி** அவர்களுக்கும்

லண்டன் SW 17, சேர்ச் லேனில் அமைந்துள்ள புனித நிக்கலஸ் ஆலயத்தில் விவாக ஆராதனை நடைபெறவிருப்பதினால் மணமக்களை உங்கள் பிரார்த்தனைகளில் நினைத்துக் கொள்ளுங்கள்.

திரு.திருமதி ரி.கணேசலிங்கம்
25, சேர்ச்கிளாஸ், மேல் சிசெக்ஸ்.
RHI 5 HEZ

அதி.வண.திரு.திருமதி எஸ்.ஜெபநேசன்
பேராயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.

(21093) (21-19-15)




இன்று யாழ். நகரிலே முற்றிலும் மிகத்தள்ளுபடி விலையில் கையடக்கத் தொலைபேசிகளை விற்பனை செய்து விற்பனைச் சாதனை புரிந்துவரும்

## நவீன் செலூலர் போன் சொப்

தமது வாடிக்கையாளர்களை மேலும் பெருக்கிக் கொள்ளும் வகையில் நவீன முறையில் வெளிவரும் கையடக்கத் தொலைபேசிகளை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகின்றார்கள் என்பதனை மிக்க மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றார்கள் நவீன் செலூலர் போன் ஸ்தாபனத்தார். உங்கள் இன்றைய கையடக்கத் தொலைபேசிகளின் வகைகளான நொக்கியா, சம்சூன்ங், மோட்டோறோலா, அல்கெட்டல், சீமென்ஸ், பனசொனிக், பொஸ் என எல்லாமே புத்தம் புதியவைகள். அத்துடன் அதன் உதிரிப்பாகங்களையும் மிகக்குறைந்த விலையில் தரமானவைகளாகப் பெற்றுக்கொள்ள இன்றே கஸ்தூரியார் வீதியில் ராஜா தியேட்டருக்கு அருகிலுள்ள ஆனந்தா பில்டிங் முதலாவது மாடிக்கு வாருங்கள்.

### நவீன் செலூலர் போன் சொப்

இலக்கம் 185/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்)
தொலைபேசி: 0777-574160/265711

உரிமையாளர்: வே. கிருபாகரன்

**NAVEEN CELLULAR PHONE SHOP**

(20853) (26-15-19-21)

சமாதானம் நிரந்தரமாக வேண்டுமானால்

# தமிழரின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது அவசியம்!

## ஜப்பான் அமைச்சரிடம் பல்கலைக்கழக ஊழியர், இந்துமத குருமார் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.6

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற் படுத்துவது நிரந்தர சமாதானத்துக்கு மிகவும் அவசியமானதாகும்.

யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங் கம் மற்றும் சர்வதேச இந்துமத குரு மார் ஒன்றியம் ஆகிய அமைப்புகள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜப்பானின் சிரேஷ்ட உதவி வெளி விவகார அமைச்சர் டெற்சுரோயானோ விடம் கையளித்த மகஜர்களிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கையளித்த மகஜரில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

யாழ். மாட்டத்தின் 30 சதவீத நிலப்பரப்பு ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களின் மரபுவழி தாயகப் பிரதேச மாகும். இப்பிரதேசமானது தற்போது உயர் பாதுகாப்பு வலயமென ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பெயரிடப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக் கள் தமது உடைமைகள், விவசாய நிலங்கள், கடற்றொழில் வளங்கள், பாடசாலைகள், வழிபாட்டிடங்களுடன் தமது குடியிருப்புக்களையும் இழந்து பிறரது இல்லங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் அடைக்கலம் தேடி யுள்ளனர்.

கரையோரங்களில் வாழும் கடற் றொழிலாளர்கள் தமக்கு விதிக்கப்பட்ட கடுமையான விதிமுறைகளால் மிக வும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனுமதி அட்டை முறை, நேரக்கட்டுப்பாடு, படகு களையும், கடற்றொழில் உபகரணங் களையும் சோதனையிடும் நடைமுறை எனப் பல்வேறு விதிமுறைகளை ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் இத்தொழி லாளர் மீது திணித்துள்ளனர்.

மீள்குடியமர்வையும் புனர்நிர்மா ணத்தையும் அமுல்செய்ய நம்பிக்கை யைக் கட்டியெழுப்புதல் அவசியமா கும். இதில் மிகமுக்கியமானது நீண்ட காலமாகத் துன்பப்படும் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துத லாகும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிக ளான தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரும்பான்மை பங்களிப்புடன் கூடிய இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை வடக்கு - கிழக்கு மக்களுக்காக ஏற் படுத்துதல் நிரந்தர சமாதானத்துக்கு மிகவும் அவசியமானதாகும் - என்றுள் ளது.

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றி யம் கையளித்த மகஜரில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்து அந்த சுதந்திரத்தை தமிழ் மக்கள் அனுபவிக்கவில்லை. பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைக் கொடுக் காமல் தமிழ்மக்களை இலங்கையின் சிறுபான்மை இனமாகக் கருதி கொடுக்கப்படவேண்டிய உரிமைகளைக் கொடுக்காமல் காலத்தைக் கடத்தி வருகின்றார்கள்.

தொடர்ந்தும் தமிழ் மக்கள் ஏமா றத் தயாராகவில்லை என்ற முடிவில் தர்மயுத்தம் ஆரம்பமானது. தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கம் இன்று இராணுவத்திற்கு சமமான பலத்துடன் உள்ள நிலையில் சர்வதேச நாடு களின் மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வு காண்பதற்கு பேச்சு முன்னெ டுக்கப்பட்டது.

இதன் பயனாக பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலவுகின்றது.

ஆனால், யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த மண்ணில் - சொந்த வீட்டில் - மீளக் குடியமர முடியவில்லை. தங்கள் மத வழிபாட்டுக்காக ஆலயங்களுக் குச் சென்று சுதந்திரமாக வழிபட முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ் மக்க ளின் வீடுகள் இராணுவ முகாமாக மாறியுள்ளன.

எனவே, தொடர்ந்தும் பேசி என்ன பயன். எனவேதான் விடுதலைப் புலி கள் சமாதானப் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடைநிறுத்தினார்கள்.

இலங்கையில் யுத்தம் நிறுத்தப் பட்டு மக்கள் சமாதானத்துடன் சுபீட் சமாக வாழ சர்வதேச நாடுகள் நிதி யுதவிகள் வழங்க முன்வந்த நிலை யில் அந்த நிதி வடக்கு - கிழக்கு மக்களுக்கு நீதியாகவும் நியாயமாக வும் கிடைத்துப் பயன்பெற வேண்டு மானால் தமிழர்களின் ஏகபிரதிநிதிக ளான தமிழீழ விடுதலைப் புலிகளி டம் இடைக்கால அரசை ஒப்படைத்து அவர்கள் மூலம் புனர்வாழ்வு, புனர மைப்பு செய்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர் - என்றுள்ளது.(ஒ-4)

### காலாவதியான பிஸ்கட் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

வண்ணார்பண்ணைப் பகுதியி லுள்ள வியாபார நிலையம் ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான 100 கிராம் எடை கொண்ட 38 கிறீம் கிராக்கர் பைக் கட்டுக்கள் அப்பகுதி பொதுச்சுகாதா ரப் பரிசோதகர் மற்றும் அவரது உதவியாளரான சுகாதாரப் பாதுகாவ லர் ஆகியோரால் கடந்த வியாழனன்று கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட கடை உரிமையாளரும் எச் சரிக்கை செய்யப்பட்டார் என மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ம.மரிய தாசன் அறிவித்துள்ளார். (எ)

### மட்டுவில் பகுதியில் மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஓக.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தினர் இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை மட்டுவில் வளர்மதி சன சமூக நிலைய மண்டபத்தில் எதிர் வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் நடத்த வுள்ளனர்.

கண், சலரோகம், இரத்த அழுத் தம், வாய்ப்புற்று, தொழுநோய், பொதுமருத்துவம் ஆகிய பரிசோத னைகளை கழக டாக்டர்கள், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாண வர்கள், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகி யோர் நடத்தவுள்ளனர்.

தென்மட்டுவில், மட்டுவில் நுணா வில், கைதடி நுணாவில், சந்திரபுரம், மட்டுவில் கிழக்கு, மட்டுவில் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச சேர்ந்த மக்கள் இந்த பரிசோதனை முகாமில் கலந்துகொள்ளலாமென கழ கச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-117)

### கசிப்பு வழக்கில் ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஓக.6

கசிப்பு வைத்திருந்த ஏழுபேருக்கு யாழ். நீதிமன்றம் ஒரு லட்சத்து 2 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித துள்ளது.

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானசீலன் என் பவரை 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 5ஆயிரம் ரூபா தர்மப்பண மும் செலுத்துமாறும் -

வட்டுக்கோட்டை, அராலியைச் சேர்ந்த பரமசிவம் சசிக்குமார், யாழ். திருநகரைச்சேர்ந்த சவரியார் றொபேட சன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பக்கிரிபத்தர் தம்பிராசா, இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த றெயிஸ் கிளாடி யஸ், கோண்டாவிலைச் சேர்ந்த சின் னப்பொடி கதிரவேல் மற்றும் இணு வில் கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் அன்னலட்சுமி ஆகிய அறுவரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பண மும், தலா 2ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும் - யாழ்.நீதி மன்ற நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

# கல்வி, அறிவியலை மட்டுமன்றி மாணவர்கள் மனிதப் பண்புகளையும் வளர்க்க வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் டாக்டர் ஆதவன் உரை

மாணவர்கள் கல்வி, அறிவியலில் முன்னேற்றம் அடைவது மட்டுமன்றி மனிதப் பண்புகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியகலாநிதி பு.ஆதவன்.

அண்மையில் நடைபெற்ற கந்த ரோடை தமிழ்க்கந்தையா வித்தியா லயத்தின் பரிசளிப்பு விழாவில் பிர தமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அதிபர் க.செல்வக்குமாரன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் கல்வி அறிவில் மட்டும் தேர்ச்சிபெற்றால் போதாது. கல்வியுடன் குணப்பண்பையும் வளர்த்து தம்மை உயர்த்திக்கொள்ளவேண் டும்.

குணப்பண்பை வளர்க்காமல் கல்வியை மட்டும் பெறுவதால் உல கில் அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச் சியடைந்துள்ளதே அன்றி மனிதப் பண்புகள் மறைந்துவருகின்றன.

இன்றைய உலகில் அழிவுகள், அனர்த்தங்கள், கொடுமைகள் பெரு கிவருவது வேதனைக்குரியது. மாண வர்கள் பெற்றோரை மதித்து பணிந்து ஆசிரியர், மனம் மகிழும்படி ஒழுக்க மாக வாழ்ந்தால் சமூகம் அவர்க ளைப் போற்றும்.

அகந்தையை விட்டு பணிவு அடக்கத்துடன் அறிவாற்றலைப் பெற்று குணவளம் மிக்கவராக வாழவேண் டும். அறிவு உலகைச் சார்ந்த விட யங்களைப் புரிந்துகொள்ள உதவும். - என்று தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற அதிபர் சி.சிவசரவண பவன் (சிற்பி) நிறுவுநர் நினைவுரை நிகழ்த்துகையில்:-

கல்வியைப் பெரும் சொத்தாகக் கருதும் நாம், பல ஆண்டுகளாகக் கல்வியில் மேம்பட்டிருக்கிறோம். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகை யில் இங்கு எழுத - வாசிக்கத் தெரி யாதவர்கள் மிகக் குறைவு. உள் நாட்டுப் போரினால் கொல்லப்பட்டும் அங்கவீனப்பட்டும் காணாமற்போயும் அகதிகளாகியும் அநாதைகளாகியும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களே.

தென்னிலங்கை மக்கள் இத்த கைய பாதிப்புக்களுக்கு உள்ளாக வில்லை. இருப்பினும், சில வேளை களில் அவர்களை விஞ்சும் கல்விப் பெறுபேறுகளை எமது மாணவர் பெற் றுள்ளனர். அகில இலங்கை மட்டத் தில் உடற்பயிற்சி, விளையாட்டு, இலக் கிய, நாடக இசை, பொது அறிவுப் போட்டிகளில் யாழ்.மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்துள்ளனர்.

ஆனால், மாணவர் மத்தியில் தற் காலத்தில் உருவாகிவரும் சில புதிய போக்குகள், செயற்பாடுகள் கவலை யளிக்கின்றன. உயர்கல்வி நிலை யங்களில் காட்டுமிராண்டித்தனமான பகிடிவதைகள், மது, போதைவஸ்து பாவனை, வழிப்பறி, திருட்டு, பாலி யல் வல்லுறவுகள், ஆபாசப் படங் களைப் பார்க்கும் தன்மை, பெற்றோர் - பெரியோரை மதியாத தன்மை போன்ற செயற்பாடுகள் மலிந்துள் ளன.

உத்தியோகத்துக்குரிய கருவி யாகவே நாம் இன்று கல்வியைக் கருதுகிறோம். ஆனால், நம்முன் னோர் தூய்மையான வாழ்க்கையை வாழ வழிகாட்டும் கருவியாக கல்வியைக் கருதினர் - என்று தெரிவித்தார். (எ-4-152)

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவு மீதிகளை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.6

மீளக் குடியமர்வுக் கொடுப்பன வாக ஏற்கனவே 15ஆயிரம் ரூபா வழங்கப்பட்டவர்களுக்கு மீதிக் கொடுப்பனவை வழங்குவதற்கு நட வடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சகல பிரதேச செய லர்களையும் கேட்டுள்ளார்.

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக முன்னர் தலா 15ஆயிரம் ரூபா வீதம் வழங் கப்பட்டு வந்தது.

பின்னர் உலக வங்கியின் நிதி உதவிகளை அடுத்து அக்கொடுப் பனவு 25ஆயிரம் ரூபாவாக அதிக ரிக்கப்பட்டு தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இருப்பினும் ஏற்கனவே 15ஆயி ரம் ரூபா வழங்கப்பட்ட குடும்பங்க ளுக்கு மீதிக் கொடுப்பனவாகிய 10ஆயி ரம் ரூபா இதுவரை வழங்கப்பட வில்லை. மீதிக் கொடுப்பனவு வழங்கு வதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அர சாங்க அதிபர் சகல பிரதேச செய லர்களையும் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் சகல பிர தேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை ஒனன்ற அவர் அனுப்பிவைத்துள்ளார். (ம-4-5-76-117)

### மயானங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

நவாலி - ஆரியம்பிட்டி மயானம், ஆனைக்கோட்டை - எருக்கலம்பிட்டி இந்துமயானம் ஆகியன இரண்டாவது தடவையாக சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

மேற்படி இரண்டு இந்து மயா னங்களும் கடந்த 10வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படாத தால் பற்றைக் காடுகளாகக் காணப் பட்டன.

மேற்படி இரண்டு இந்து மயா னங்களையும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அண்மையில் முதற்கட்டமாக சிரமதான மூலம் புனரமைக்கும் வேலைகள் ஆரம் பித்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. (எ-185)

# கராத்தே கழகச் சங்கத்தில் பதிவுசெய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கராத்தே சங்கங்களும், கராத்தே கழகச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப் பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவுசெய்யப் பட்ட கராத்தே கழகச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தின் நடைமுறைப் படியே இந்த அறிவுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில், கராத்தே பயிற்று விக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள் பங்கேற்றனர். யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி இதில் சிறப்புரையாற்றி னார். இச்சந்திப்பின் போது கராத்தே கழக சங்கத்துக்கான புதிய நிர்வா கம் தெரிவுசெய்யப்பட்டது.

இந்தப் புதிய நிர்வாகத்தின் நடைமுறைப்படி யாழ்.மாவட்டத்தில உள்ள அனைத்துக் கராத்தே சங்கங்க ளும் கராத்தே கழக சங்கத்தில் பதிவு செய்யப்படவேண்டுமென்றும் -

பதிவு செய்யப்படாத கராத்தே சங்கங்கள் எதிர்வரும் 10ஆம் திக திக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளும்படியும் - அறிவுறுத் தப்பட்டுள்ளது. (ஒ)

### ஆறுமாத காலத்தில் 4 லட்சம் அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஓக.5

வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் கடந்த ஜூன் மாதம் வரையிலான ஆறுமாத காலப்பகுதி யில் கசிப்பு உற்பத்தி, விற்பனை கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு உற் பத்திக்கு பயன்படுத்தும் கோடா வைத்திருந்தமை, அனுமதிப் பத்திர மின்றி சாராயம், கள் வைத்திருந் தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு 4லட்சத்து 22ஆயிரம் ரூபா அபராத மாக விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக் களத்தினர் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட திடீர்சோதனைகளின்போது சிக்கிக் கொண்ட 120 பேருக்கு எதிராக சாவ கச்சேரி, பருத்தித்துறை நீதிமன்றங்க ளில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களில் குற்றவாளிகளிடமிருந்து இந்த அபராதம் அறவிடப்பட்டதாக பருத் தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பூ.ரகுநாதன் தெரி வித்தார். (எ-117)

### பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

சண்டிலிப்பாய்,ஓக.6

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தின் வருடாந்த பரிச ளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய அதிபர் ந.சிவ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற வுள்ளன.

இவ்விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் சிறப்பு விருந்தினராக திருமதி பொன்மலர் இராஜேஸ்வரனும் கௌரவ விருந்தினராக கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஆ.காந்தநேசனும் கலந்து கொள்வர்.

• நிறுவுநர்தின உரையை ஓய்வு பெற்ற கடற்படை அலுவலர் ஹலக் விசுவநாதன் நிகழ்த்துவார். (ஒ-135)

★ ★ ★

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை யின் பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் அதிபர் மு. செல்வதாஸ் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துகொள்கிறார். (எ-150)

### அக்னி அபிஷேக பெருவிழா

அருட்தந்தை போல் றொபின்ச னின் வழிநடத்தலில் அக்கினி அபி ஷேக பெருவிழா இன்றும் நாளையும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆல யத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5மணி தொடக்கம் இரவு 9மணி வரையும், நாளை வியா ழக்கிழமை மாலை 6மணி தொடக் கம் நள்ளிரவு 12 மணிவரையும் இப் பெருவிழா நடைபெறும். (ஒ-4)

# குமரிப் பெருநிலமும் இலங்கைத் தீவும் பண்டைத் தமிழர்களின் தாயகங்கள்

## கடல்கொண்ட பின்னர் எஞ்சியவை தென்னகமும் ஈழமுமே ஆகும்

**பொன். சக்திவேல்**

ஊர்ப் பெயர்களில் அமையும் பொதுக்கூறும், சிறப்புக்கூறும் முறையே நிலவியல் மக்கள் வரலாற்றையுணர்த்த மிகுதியாகத் துணை செய்கின்றன. மனிதன் எங்கு வாழ்ந்தாலும அடிப்படையுணர்வுகளில் மாறுபாடு எழுவதற்கு வாய்ப்பில்லை என்பது உறுதி.

பாதுகாப்பிற்காக உறைவிடத்தை அமைத்துக்கொண்டு வாழத்தொடங்கிய மனிதன், பின்னர் அவ்விடத்தைப் பிறருக்கு உணர்த்தவும், பிற உறைவிடங்களிலிருந்து அவற்றை வேற்றுமைப்படுத்திக்காட்டவும் பெயர்களை அவற்றுக்குச் சூட்டினான்.

இலங்கையின் பல தமிழ்ப் பெயர்கள் இன்று சிங்களவர் தொடர்பால், சிங்களப்பெயர் எனச் சுட்டும் வழக்கம் காணப்படுகிறது. அம்பாறை என்பது அழகிய பாறை எனத் தமிழில் தெளிவாக அமைகிறது. எனினும், இப்பெயர் தமிழ்ப் பெயர் என்றும் சிங்களப் பெயர் என்றும் கருத்து மாறுபாடுகள் உள்ளன. எனவே, ஒவ்வொரு ஊர்களின் பெயரும் தனித்தனியே வரலாற்று ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் எனும் பெயர் ஆங்கிலத்தில் Jaffna என வழங்கப்பட்டாலும், யாழ்ப்பாணப் புகழை உரைக்கும்போது தொண்டைமானாறு செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தலபுராணம் "பொன்னுயர் ஈழநாட்டில் பொருதிய வடபால் யாழூர்" எனச் சிறப்பித்துக் கூறுகின்றது.

யாழ்ப்பாணத்தின் இயற்கை அமைப்பினைக் காணும்போது, அதன் வடக்கும் கிழக்கும் வங்காளக் குடாக்கடலும் தெற்குப் பூநகரிக்கடல், பண்ணைக்கடல்களும் மேற்கு கோடிக் குடாக்கடலும் எல்லையாக விளங்குகின்றன.

அஃது, இலங்கையின் வடபாகத்திலேயுள்ள ஒரு துவிகற்பம். இதனது அயலிலே காரைதீவு, வேலணைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய தீவுகளுமுள்ளன.

இவைகள் எல்லாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவே. யாழ்ப்பாணம் தனித்ததொரு பகுதியாக அமைந்தபோதும் குமரிமுனை கடல் கோள்களின் பின்பு மேற்கேயிருந்த தீவுகள் பல தீவுகளாகப் பிரிக்கப்பட்டு, அதன் பயனாக காரைதீவு(காரைநகர்), வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு எனும் தீவுகள் ஏற்பட்டன.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தின் பிறபல பெயர்களும் ஆய்வுக்குரியனவாகும், வரலாற்றை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. நாகநாடு, நாகதீபம் என்ற பெயர்களை இப்பகுதி பெற்றிருந்தது.

இலங்கையை இரத்தினதுவீபம், இலங்கை, ஈழம், ஓபீர், ஒளிநாடு, சலாதீபம், சிங்களதீவகம், சிலோன், செரன்தீவு (சேரன்தீவு என்பதன் மரு உஉ) தப்ரபேன், சிவபூமி, திருநாடு, நச்சதீபம், நித்திலதீபம், மத்துவீபம், மாணிக்கதீபம், மும்முடிச் சோழ மண்டலம், நாகதீபம், வாதுவீபம், ஸ்ரீலங்கா எனப் பல பெயர்களில் அழைக்கிறார்கள்.

### சீன நாட்டினர் பங்கு

சீனநாட்டினர் இரத்தினக் கற்களைப் பெற்றமையால் இரத்தினதுவீபம் என அழைத்தனர் என்று விபுலானந்த அடிகள் நூலின் 3ஆம் பக்கத்தில் உள்ளது. ஈழத்தில் நிலத்தின் உள்ளே இரத்தினக்கற்கள் செறிந்து கிடக்கின்றன. இவற்றை மக்கள் நிலத்தை அகழ்ந்து எடுத்தனர். இவ்வாறு சீன நாட்டினர் இரத்தினக்கற்கள் பெற்றமையால் இரத்தினதுவீபம் என அழைத்தனர் என 'ஈழமும் தமிழரும்' எனும் நூலில் உள்ளது.

இலங்கை, ஈழம் என்ற இரு பெயர்களும் தமிழ் இலக்கியத்தில் அமைகின்றன. ஈழம் இலங்கையின் வடபகுதியினையும், இலங்கைத்தீவு முழுவதையும் இது குறிக்கின்றது. கடலில் இயங்கிக்கொண்டும் ஒளிர்ந்து கொண்டும் இருந்தமையினால் இலங்கை என்ற பெயர் பெற்றது.

பொலிதல், இலங்குதல், ஒளிர்தல், துலங்குதல் எனும் சொற்கள் அனைத்தினதும் கருத்து ஒன்றே. 'இலங்கை' எனும் சொல். இலட்சம் என்னும் சொல்லின் மருவு எனக் கொள்வோருமுண்டு. ஈழத்தினுக்குப் பக்கத்தில் இருந்த இலட்சம் தீவுகள் கடலில் மறைய ஈழத்தீவு நிலைத்திருந்ததால் இலங்கை என்றாகியிருக்க வேண்டும்.

இலங்கை எனும் வடசொல்லிற்குத் தீவு என்பது பொருள். இலங்குதல் அடியாகப்பிறந்த பெயர் என்ற தமிழ்ச் சார்புக் கருத்தும், தீவு என்ற வடசொல்லின் அடிப்படையில் பிறந்த பெயர் என்ற வடமொழிச் சார்புக் கருத்தும் காணப்படுகின்றன.

அசோக மன்னன் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலும் இரண்டாவது பாறைக கல்வெட்டு கட்டளையில் சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேசளபுத்திரர் என்றோரும் தாம்பபன்னியென இலங்கையை அழைத்தனர்.

தவிர, பிறநாட்டாராலும் தாம்பபன்னி எனவே அழைக்கப்படுகிறது. திராவிட மொழியில் அகராதி இலங்கை என்பதை திராவிட சொல்லாகக் கருத இடமில்லை என்கிறது. இலங்குதல், ஒளிவிடுதல் என்பதை விட இலங்கைத தீவு என்ற நிலையில் பெயர் பெற்றிருப்பது மிகப பொருத்தமானதாக அமைகின்றது.

### தமிழ் இலக்கியங்கள்

இடைக்காலத்துத் தமிழகத்து தமிழ் இலக்கியங்கள் இலங்கை பற்றி பின்வருமாறு கூறியுள்ளன.

"கடல் சூழ் இலங்கைக் கயபாகு" எனச் சிலப்பதிகார உரையும்" இலங்கா தீவத்துச்சமனொளி எனும் சிலம்பினை எய்தி" என மணிமேகலை உரையும்

சோவரணும் போர்மடியத் தொல் லிலங்கைக் கட்டழித்த சேவகன்" என சிலப்பதிகாரமும்-

"தென்னிலங்கையர் வேந்தன் பொருவரை எடுத்தவன்" என திருஞான சம்பந்தர் தேவாரமும்-

இல் என்றால் வீடு என்று பொருள். இலங்கை என்ற சொல்லே தமிழ் மக்களின்வீடு என்னும் பொருள் குறிக்கும் தமிழ்ச்சொல் என ஆன்றோர் உரைப்பர். தமிழகத்தோடு ஒட்டியிருக்கும் நில அமைப்பும் இக்கூற்றுக்கு சான்று பகரும்.

குமரிப் பெருநிலமும் இலங்கைத் தீபகற்பமும் பழந்தமிழரின் தாயகம், தமிழன் அரும்பியதும், மலர்ந்ததும், கனிந்ததும் இப்பகுதிகளில்தான். குமரிப்பெருநிலம் கடல்கோளால் அழிந்தபின் நமக்கு எஞ்சியது தென்னகமும் இலங்கையும் ஆகும்.

அடுத்து ஈழம் என்ற பெயருக்கு அறிஞர் காட்டும் காரணங்கள் பல.

இலங்கையில் பெரும் தொகையான பொன், மிகுதியாகக் கிடைத்தமையால அதனை ஈழம் எனப் பண்டைத் தமிழர் அழைத்தனர் என இலங்கையில் தமிழ்ப்பண்பாடு நூல்- பக்கம்-1 அறியத்தருகின்றது. தென்னைகள் அதிகமாகக் கிடைத்தமையால் கள்ளுக்கு பெயர்போன நாடு எனும் பெயர் ஈழம என பெயர் பெற்றதாக இலங்கையில் தமிழ்ப்பண்பாடு - பக்கம்-12 சான்று பகர்கின்றது.

அடுத்து ஈழ என்ற மொழி இயக்கர், நாகர் பேசிவந்தமையால் ஈழம் என உருவானதாகவும் கூறுகிறார்கள்.

இலங்கை பற்றிய தொன்மைச் சான்றுகள் தெளிவுபெற கிடைக்கவில்லை. ஆயினும், இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த புலவர்கள் செய்த புலனாய்வுகள் சான்றாக உள்ளன. பௌத்த மடாலய நூலகங்களினூடாக தெரியவரும் தமிழக, ஈழஇலக்கிய உறவுகள் எனும் 5ஆம் உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கு ஆய்வுக்கட்டுரைகள்.

சங்க காலம் சார்ந்த எண்ணங்கள என்ற தொகுப்பின் பௌத்த மடாலயங்கள் ஊடே வளர்ந்த கல்விப்பரம்பரை வளர்ச்சியிலே தமிழ் நாட்டு தேரர்களின் உறவினையும் தெளிவாகக் கூறுகின்றது.

இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கும்போது ஈழம் என்பது தமிழ்ச சொல், இலங்கையின் ஒரு பகுதியே ஈழம் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கையை திருமூலர் 'சிவபூமி' என அழைக்கின்றார் அவரது திருமந்திரத்தில்.

மேரு நடு நாடிமிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாடுந்திலை வனத் தண்மா மலையத்து
ஏறுஞ்சுழுனை இவை சிவபூமியே-

(10ஆம் பக்கம் பார்க்க)

# உடன்படிக்கை ஏற்பட்டு 17 மாதங்களாகியும் தமிழ்மக்களின் வாழ்வு நிலை படுமோசம்

## தமிழீழ விடுதலை அணிப் பொதுச் செயலாளர் ஈழவேந்தன் தெரிவிப்பு

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்து 17மாதங்கள் கடந்துவிட்டபோதும்.கூட, தமிழ்மக்களின் வாழ்வுநிலை படுமோசமாகவே உள்ளது.

தமிழீழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர் மா.க.ஈழவேந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பிரிவில், கிறிஸ்தவ சமய சமூக ஆய்வுமன்றத்தினால் ஏற்பாடு செய்யபட்டிருந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

'ஈழத்தமிழினத்தின் வரலாற்றுப் பின்னணியும் இன்றைய நிலையும் எதிர்காலமும்' என்ற தலைப்பில் உரையாற்றிய ஈழவேந்தன் மேலும் கூறியதாவது:-

திருமலையிலும் சரி, மட்டக்களப்பிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி, உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ்மண் திட்டமிட்டுப் பறிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் மூன்றிலொரு பகுதி இராணுவத்தின் கைவசம் உள்ளது.

நாற்பதாயிரம் சிங்களப் படையினர் இம்மண்ணில் குடிபுகுந்து எம்மை எந்நிலையிலும் தாக்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இதையொட்டி இந்தியப் படைத்தளபதி நம்பியாருடன் நான் உரையாடியபோது "தமிழ் மக்களின் மீள்வாழ்வு பற்றி நீங்கள் கவலைப்படுவீர்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இராணுவத்தற்குப் பாதுகாப்புக் கொடுப்பதுதான் என்னுடைய பணி" என்று சொன்னார். 'தமிழ்மக்களுக்குத் தமிழ் மண்ணில் பாதுகாப்பற்ற நிலையில் சிங்கள இராணுவம் இங்கு பாதுகாப்போடு இருப்பதற்கு உத்தரவாதமளிக்கமுடியாது என நான் அவரிடம் கூறினேன்.

அண்மையில் வருகைதந்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவை யாழ்ப்பாண செயலக கேட்போர்கூடத்தில் சந்தித்து உரையாடியபோது தமிழ் மக்களின் மறுவாழ்வு பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால், உங்கள் இடைக்கால அரசு பற்றிய மாதிரி வரைவில காணி, காவல்துறை, பாதுகாப்பு, வரி போன்ற விடயங்கள் இடைக்கால அரசிற்கு ஒப்படைக்கப்படாதென்று குறிக்கப்பட்டுள்ளது. காணியோ, நிலமோ அற்ற நிலையில் தமிழ்மக்களிற்கு எப்படிப் பாதுகாப்புக் கொடுக்க முடியும் எனக் கேட்டேன். அதற்கு அவர் கூறிய விடை 'இது ஒரு மாதிரிவரைபு தான்' என்பதாகும்.

அதற்கு விடையாக 'மாதிரி வரைபிலேயே தமிழ்மக்களின் உயிர்ப் பிரச்சினையாகிய நிலப்பிரச்சினை புறக்கணிக்கப்படுகையில் உங்களையோ உங்கள் அரசையோ எவ்வாறு நம்பமுடியும் எனக் கேட்டேன்.

மேலும் அவருடன் நான் பேசுகையில், விரைவில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து சிங்கள இராணுவம் வெளியேறும் என்று உறுதி அளித்துள்ளீர்கள். ஆனால், யாழ்ப்பாணப் படைத் தளபதியோ முழு அமைதி ஏற்படும் சூழ்நிலையில்தான் இராணுவம் வெளியேறும் என்று கூறியுள்ளார். இந்நிலையில் நாம் படைத் தளபதியையா அல்லது அமைச்சராகிய உங்களையா நம்புவது' என்று கேட்டேன். உங்களை நம்ப நான் விரும்புகின்றேன். ஆனால், இராணுவம் குடியரசுத் தலைவி சந்திரிகாவின் ஆட்சிக்குள்தான் உட்பட்டிருக்கின்றது. எனவே தான் நாம் ஏமாற்றப்படுகின்றோம் என்று கூறியபோது அவர் பதில் கூறாது புன்னகைத்தார்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டது போன்று விடுதலைப் புலிகளின் தலைவர்களை இலகுவில் ஏமாற்றமுடியாது. இதை ஸ்ரீலங்கா அரசு உணரவேண்டும் - இவ்வாறு ஈழவேந்தன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்ட சம்பவங்களையும் தமிழ்மக்கள் அனுபவித்த இன்னல்களையும் ஈழவேந்தன் தன் நீண்ட உரையில் எடுத்துக்கூறினார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடத்த இந்நிகழ்வில் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனும் கலந்துகொண்டார். (ஐ-3)

Awaiting A/L Results

Study In India - Bangalore University at
NATIONAL FIRST GRADE COLLEGE
2nd Cross, Bhoopasandra, R.M.V. Extn 2nd Stage, Bangalore 94
T.P: 0091-80-3414557, 3417833 Fax : 0091-80-3615621, 3417832
E-mail : nsac@bal.vsnl.net.in web : www.nfgcollege.com

THREE YEARS

Bangalore University Degree

கடந்த 10 ஆண்டுகளாக பின்வரும் பட்டப்படிப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| B.Sc. | - உயிரியல் தொழில்நுட்பம் |
| B.Sc. | - மரபணுவியல் |
| B.Sc. | - நுண் உயிரியல் |
| B.Sc. | - கணனி விஞ்ஞானம் |
| B.B.M. | - தொழில் முகாமைத்துவம் |
| B.C.A. | - கணனிப் பிரயோகம் |
| B.Com+ | - கணனி |
| M.Sc. | - நுண் உயிரியல் |
| M.Sc. | - உயிரியல் தொழில்நுட்பம் |
| M.B.A. and M.Sc. | |

2003 ஆவணி மாதம் 9ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலவசக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் 2003 ஆவணி 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பு கில்ற்றனில் அப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நுண் உயிரியல் முதுமாணிப் பட்டத்தில் 100% முதற்றரத்தில் சித்தியெய்தியுள்ளார்கள். இவர்கள் முதலாம், 2ஆம் தரங்களில் சித்தியெய்தியுள்ளார்கள். 250இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே விடுதி வசதிகள் உள்ளன. 150 இலங்கையர்கள் ஏற்கனவே பட்டம் பெற்றுள்ளார்கள். 24 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்கிறார்கள். இந்திய அரசின் புலமைப்பரிசுத் திட்டத்தின் மூலம் ICCR ஊடாக இதற்கான பதிவுக் கட்டணம் US$ 400

2003 உயர்தரக் கல்வி முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் இணைந்துகொள்ளலாம். இதன் மூலம் ஒரு கல்வி ஆண்டை மீதப்படுத்திக்கொள்ளமுடியும்.

09ஆம், 10ஆம் திகதிகளில் இணைந்துகொள்பவர்களுக்கு வசதியான முறையில் கட்டணங்கள் அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

Company Secretarial Services (pvt) Ltd. 285C 1/1, Stanley Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda.
Tel: 01-854438 E-mail : yapadd@sol.lk Mr.Gunawardana Res. 01-811524 Mr.Gunasekara Res.038-2232657, 038-2234154, 078-697512

(C/29323) (22-11)

# யாழ். பிரதம தபாலகக் கட்டடப் பணிகளை ஒக்ரோபர் முற்பகுதிக்குள் முடிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

பழைய இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் யாழ். பிரதம தபாலகத்தை ஒக்ரோபர் 24ஆம் திகதி திறந்துவைப்பதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அதிகாரிகளுக்கு இலங்கையின் தொடர்பாடல் அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இலங்கையிலேயே முதல்தர தபால் நிலையமாக யாழ். மாவட்ட அஞ்சல் நிலையம் அமையவேண்டும் என்ற எண்ணத்துடன் பிரமாண்டமான முறையில் பல கோடி ரூபா செலவில் தற்போது புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதனை மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் திறந்துவைக்கப்படவேண்டியுள்ளதால் அதன் புனரமைப்புப் பணிகளை ஒக்ரோபர் மாத முற்பகுதிக்குள் நிறைவேற்றுமாறும் -

காரைநகர் மற்றும் சாவகச்சேரி உப அஞ்சல் அலுவலகங்களையும் அதேகாலப் பகுதிக்குள் புனரமைத்து எதிர்வரும் ஒக்ரோபர் 24ஆம் திகதியன்றே அவற்றையும் மக்கள் சேவைக்கெனத் திறந்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் -

தொடர்பாடல் அமைச்சால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-12)

# ஜப்பானிய பிரதி அமைச்சர் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஓக.6

ஜப்பானின் சிரேஷ்ட உதவி வெளிவிவகார அமைச்சர் டெற்சுரோ யானோ தனது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய பின்னர் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றி பேச்சு நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நண்பகல் இப்பேச்சு இடம்பெற்றது. பிரதமருடன் உதவி வெளிவிவகார அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே மற்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

ஜப்பானிய அமைச்சருடன் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகாவும் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இதேவேளை -

ஜப்பானிய சிரேஷ்ட உதவி வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நிதி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மாத்தறைக்கான நீர் விநியோகத் திட்ட ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இதற்கிடையே -

பிரதமரின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானியக் கல்லூரி மாணவிகள் மூவரையும் பிரதமர் நேற்று அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். (ம-9)

## கலந்துரையாடல்

காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட தென்மராட்சி தெற்குப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பெரும்பாக அலுவலர் எஸ்தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம-10-117)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சிறந்த பிரதேச சபைக்களுக்கான போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற வலி.வடக்கு பிரதேச சபைக்குரிய விருதினை மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரத்திடமிருந்து பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

*(படம்:தெல்லிப்பழை செய்தியாளர்)*

# முப்பது லட்சம் ரூபா செலவில் 4 மதகுகளைத் திருத்தத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ் மாவட்டத்தில் உள்ள நான்கு மதகுகளை 30 லட்சம் ரூபா செலவில திருத்துவதற்கான நடவடிக்கை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட்விருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலோலி - கொடிகாமம் வீதியில் உள்ள வரணிப்பகுதி மதகு மற்றும் வேலணை - ஊர்காவற்றுறை வீதியில உள்ள இரண்டு மதகுகள், இவற்றோடு வல்வெட்டித்துறையில் உள்ள உதயசூரியன் மதகு ஆகியவையே திருத்தப்படவுள்ளன.

இதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படவிருப்பதாகவும், விரைவில் இதனை அடிப்படையாகக் கொண்டு இப்பணிகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்குரிய வீதியும் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ம-12)

# ஆசிரிய சங்கங்களுடன் கல்வி அமைச்சர் சந்திப்பு

கொழும்பு,ஓக.6

இலங்கையில் உள்ள ஆசிரியர்கள எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு கலந்துரையாடவுள்ளார்.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது. கடந்த காலங்களில் சில ஆசிரியர் சங்கங்களுடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ள போதும் ஏனைய சங்கங்களின் நிலையைக் கருத்திற்கொண்டே அவர் இந்த ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

சுமார் 80 ஆசிரியர் சங்கங்களுக்கு இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-10)

## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஓக.6

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் 'தெய்வீக இசையரங்கு' நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியங்களாக வயலின் - எம்.றதீஸ்குமார், மிருதங்கம் - வி.ரமணன், முகர்சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ம-10)

## இலங்கை வங்கி ஆண்டு விழா

சாவகச்சேரி,ஓக.6

இலங்கை வங்கியின் 64ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை வங்கியின் சாவகச்சேரிக் கிளையிலும் நிறைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளையின் முகாமையாளர் ந.இராஜகோபால் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வாடிக்கையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-10-31)

## புதிய கேணிக்கு அடிக்கல்

அல்லாரை அறுகம்புலம் பிள்ளையார் கோயில் தீர்த்தக் கேணிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

இந்த நிகழ்வில் அவ்வூர் மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.(ம-10-31)

## மாணவருக்கு போஷாக்கு உணவு

வலிகாமம் தெற்கு,ஓக.6

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் சங்கானைக் கோட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் கல்வி பயிலும் மெல்லக்கற்போர் வகுப்பு மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்கி வருகின்றது.

வட்டுக்கோட்டை கார்த்திகேயர் வித்தியாலயம், மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, தொல்புரம் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே இப்போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒருகிழமையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறும் மெல்லக் கற்போருக்கான வகுப்புகளின் போது போஷாக்குணவு வழங்கப்படுகின்றது. (ம-152)

## வரணிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

வரணி,ஓக.6

வரணிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வரணி பிரதான வீதி, இடைக்குறிச்சி, மாசேரி, இயற்றாலை போன்ற பகுதிகளிலேயே இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-10-170)

## சங்கானை சங்கத்துக்கு புதிய தலைவர் தெரிவு


சண்டிலிப்பாய்,ஓக.6

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ம.சிவசுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபை கூட்டத்தில் இந்தத் தெரிவு நடைபெற்றது. (எ-135)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நான்காம் திருவிழா



## பாட்டும் பயனும்

பாட்டே நித்தம் அர்ச்சனை யாகப்
பாடிப் பாடிப் படைத்தேன் உனக்கு
கேட்டுக் கேட்டுச் செவிகள் தோட்டுக்
கேட்க என்னைப் பாடப் பணிப்பாய்
நாட்டத் தோடு நான்நீ பெய்த
நறுந்தமிழ் தூறலில் நனைந்து, நினைந்த
தேட்டத் தோடு தெள்ளிப் பனுவல்
தெளித்தேன் இன்னும் தெவிட்ட விலையா?

- முருகனடியான்.

## விடிவொன்று தாராயோ!

நல்லூரில் வீற்றிருக்கும் யானவேலவா
நல்லதோர் தீர்வுக்கு வழி கோலாயோ
நாடி வந்தோர் துயர் தீர்க்கும் நல்லைக் குமரா
நாதியற்ற நற்றமிழர் துயர்தனைப் போக்காயோ
துன்பங்கள் அறுத்திடும் கலியுக வரதா
துகிலுரிந்து போன பேச்சதனை தொடர்ந்திடவே
வழி செய்யாயோ
வித்ன விநாயகனுக்கு இளையவனே
விடுதலை நாடும் வீரத் தமிழருக்கு விடிவொன்று தாராயோ!

- கொழும்புத்துறையூர் வ.பிரதாப்.

## நல்ல தீர்வே தந்திடு ஐயா!

பாலகன் எனப்பரி காசம் செய்த
சூரனை வதைத்த வீரத் தலைவா!
மாலவன் மருகா! பார்வதி பாலா!
மயில் மீதேறும் முத்துக் குமரா!
வேலவன் ஆக நல்லையை ஆளும்
வெற்றிச் செல்வா! சரவணபவனே!
நீல கண்டனின் புதல்வா! எமக்கு
நல்ல தீர்வே தந்திடு ஐயா!

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## ஆண்டுக்கோர் அழகுக் கோலங் கொண்டான்

நம்பினோர் கைதொழும் நாயகனாம் – எங்கள்
நல்லை நகருறை வேலவனாம்
கும்பிடுவோரின் குறைகள் களைந்திட கோல மயிலில்
வருபவனாம்
ஆண்டியாய் பழனியில் நின்றவன்தான் – இங்கே
ஆண்டுக்கோர் அழகுக் கோலங் கொண்டான்
வேண்டுவோர்க்கு வரந்தான் கொடுத்து – தனக்கு
நீண்ட பெருங்கோவில் தானமைத்தான்
பாரடா என்றவன் பாதம் பட்டதிந்த
தேரடி மண்ணினை நீ மிதித்தால்
யாரடா நீ யெனவும் உணர்வாய் – வினை
வேருடனும் சாய்ந்து வீழ்ந்துவிடும்.

- கவிமணி அன்னைதாஸன்.

## நல்லையிலே நீயிருந்து ஆளவேண்டும்!

நல்லையிலே நீயிருந்து ஆளவேண்டும்
நற்றமிழர் நாமுனைத் தொழவேண்டும்
எல்லையிலா துயரம் தீர வேண்டும்
எங்களுக்கோர் தீர்விங்கு சேர வேண்டும்
உள்ளமதில் உவகை பொங்க வேண்டும்
உரிமை பெற்று தமிழர் வாழவேண்டும்
அல்லல்களை தீர்க்க அயில்வேலை ஏந்தவேண்டும்
ஐயா! நல்லையிலே நீயிருந்து ஆளவேண்டும்.

- மதுரகவி
காரை.எம்.பி. அருளானந்தன்.

# பல்கலைக்கழக மட்டத்திலான போட்டியில் யாழ். வீரர் ரஞ்சித் 3 புதிய சாதனைகள்

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்ப் பாண பல்கலைக்கழக வீரர் எஸ்ரஞ்சித் குமார் 3 புதிய சாதனைகளை முறியடித்தார். கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கொழும்பு பல்கலைக் கழக மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் 15.6 செக்கன்களில் ஓடி முடித்தார். பல் கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் இதுவொரு புதிய சாதனையாகும். அதேவேளை, கோலூன்றிப் பாய்தலில் 3.35 மீற்றரும், நீளம் பாய்தலில் 6.91 மீற்றரும் பாய்ந்து அவர் புதிய சாதனைகளைப் படைத்தார். பல் கலைக்கழகங்களுக்கிடையிலான சர்வதேச போட்டிகளுக்கும் அவர் தகுதி பெற்றுள்ளார்.

இவ்விழாவில் ஆண்களுக்கான போட்டிகளில் 7 புதிய சாதனைகளும், பெண்களுக்கான போட்டிகளில் 2 புதிய சாதனைகளும் படைக்கப்பட்டன.

இப்போட்டிகளில் களனி பல் கலைக்கழகம் 141 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது.

## ஆசிய மெய்வன்மைப் போட்டிகள்: இலங்கைக் குழுவில் 37 பேர்

எதிர்வரும் ஆசிய மெய்வன்மைப் போட்டிகளுக்கான 37 பேர் கொண்ட இலங்கைக் குழாம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் 15ஆவது ஆசிய மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு 25 வீரர்களையும் 12 வீராங்கனைகளையும் இலங்கை மெய்வன்மைச் சங்கம் தெரிவு செய்துள்ளது.

# இங்கிலாந்து அணியில் மாற்றங்கள்

தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணியில் பல மாற்றங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அதனையடுத்து அணித் தலைவர் பதவியிலிருந்து நஸார் ஹூசைன் இராஜினாமாச் செய்தார்.

ஆனால், முதல் போட்டியில் பங்குபற்றிய அதேவீரர்களே இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியிலும் இடம்பெற்றனர்.

எனினும், இரண்டாவது டெஸ்டில தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றது. இதையடுத்து மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் மாற்றங்களைச் செய்வதற்கு இங்கிலாந்து தேர்வுக்குழு தீமானித்துள்ளது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி ஓகஸ்ட் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிக்கான இங்கிலாந்து குழாமை எதிர்வரும் சனிக்கிழமை இங்கிலாந்து தேர்வாளர்கள் அறிவிக்கவுள்ளனர்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணியை வெல்லத்தக்கதென தாம் கருதும் அணியொன்று தனக்குத் தேவையென இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல்வோகன் கூறியுள்ளார்.

டெரன்கொவ், அந்தனி மெக்ராத், நசார் ஹுசைன், அஸ்லி கைல்ஸ் ஆகியோர் மூன்றாவது போட்டிக்கான அணியில் இடம்பெறுவரா என்பது நிச்சயமற்றதாகவுள்ளது.

# மெய்வல்லுநர்களுக்காக புதிய சங்கம் சுசந்திகா ஜயசிங்க ஆரம்பிக்கிறார்

இலங்கை மெய்வல்லுநர்களின் நன்மைகளுக்காக புதிய சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னணி ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க தீர்மானித்துள்ளார்.

உள்ளூர் மெய்வல்லுநர்களின் தரத்தை முன்னேற்றுவது தனது சங்கத்தின் நோக்கமாக அமையுமென சுசந்திகா கூறுகிறார்.

ரி.எல்.அலைலிமா தலைமையில் இலங்கையின் முன்னணி மெய்வல்லுநர்கள் ஒன்றிணைந்து தேசிய தடகள மெய்வல்லுநர்கள் சங்கத்தை (அன்ட்ஸ்பா) அண்மையில் ஆரம்பித்தனர். எனினும், சுசந்திகா இதில் இணையவில்லை.

"அன்ட்ஃபா, தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர்களின் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. கிராமப்புறங்களிலுள்ள வறிய மெய்வல்லுநர்களின் நலன்களை இச்சங்கம் கருத்திற்கொள்ளும் என நான் நம்பவில்லை.

"பல வறிய மெய்வல்லுநர்களும் பயிற்றுநர்களும் சங்கமொன்றை ஆரம்பிக்குமாறு என்னை வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் எனது சங்கத்தில் இணைவதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

"எனது சர்வதேச தொடர்புகள் மூலம் உள்ளூர் மெய்வல்லுநர்களுக்கு கூடுதலான நன்மைகளைப் பெற்றுத்தர முடியும்.

"என்னைவிட உள்ளூர் மெய்வல்லுநர்களுக்கு உதவக்கூடிய மெய்வல்லுநர்கள் இந்த நாட்டில் இல்லை."

- இவ்வாறு சுசந்திகா ஜயசிங்க கூறியுள்ளார்.

### விளையாட்டு நிகழ்வுகள்

வடமத்திய மாகாண கிரிக்கெட் சங்கத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தப்படும் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்ப்பாண மாவட்ட அணியும் மோதவுள்ளன. (ம-86)

★ ★ ★

2000ஆம் ஆண்டு இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் ஞாகார்த்தமாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றினை நடத்துவதற்கு தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படவுள்ள இச்சுற்றுப் போட்டியில் 13 வயதுக்கு மேற்பட்ட, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொ்மோர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ்ப்பாணம் சென்நீக்லஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-86)

# இலங்கைச் சுற்றுலாவில் வோர்ன் பங்குபற்றுவார்

## ஆஸி. கிரிக்கெட் தேர்வாளர் எலன்போர்டர் கூறுகிறார்

"அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய அணியின் இலங்கைச் சுற்றுலாவின் போது சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்னும் பங்குபற்றுவார்."

- இவ்வாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் அலன்போர்டர் கூறியுள்ளார்.

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை உட்கொண்டமைக்காக ஷேன் வோர்ன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஒருவருடகாலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை அடுத்த வருடம் பெப்ரவரி 10ஆம் திகதி முடிவடையவுள்ளது. இத்தடை முடிந்தவுடன் முதல் தரப்போட்டிகளில் பங்குபற்றாத நிலையிலும் இலங்கைச் சுற்றுலாவுக்கான அணியில் ஷேன் வோர்னுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

"வலையில் பந்துவீசி அவர் பயிற்சி பெற்றுவருகிறார். இந்நிலையில் தடை முடிந்தவுடன் அவர் நேராக ஆஸ்திரேலிய குழாமில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியான நிலையில் இருப்பார் என நம்புகிறேன்."

- இவ்வாறு அலன் போர்டர் கூறினார்.

(ம)

# விளையாட்டு

## கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் பரிஷ் சம்பியன்

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் நடத்திய கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மானிப்பாய் பிரிவு அணி, யாழ்பல்கலைக்கழக அணியை 2விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்களில் 8விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய மானிப்பாய் பரிஷ் அணி 8விக்கெட்டுக்களை இழந்து 38 ஆவது ஓவரில் வெற்றி இலக்கினை அடைந்தது.

இவ்வாட்டத்தின் நாயகனாக மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்த என்.ஜெய காந்தனும், சிறந்த பந்து தடுப்பளராக யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த றொபேசனும், சிறந்த பந்துவீச்சாளராக மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்த எஸ்.பாஸ்கரனும், சிறந்த துடுப்பாட்டக்காரராக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆர். ஷாஜகானும் தெரிவாகினர்.

(ஒ-5)

# குமரி....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவசமயத்தை சார்ந்த திருமூலரால் குறிக்கப்படும் நிலையில் இலங்கை சிவபூமியாக திகழ்ந்துள்ளது; சைவம் இங்கே தழைத்திருந்துள்ளது.

இராவணன் சைவ மதத்தவன். சிவபக்தன் ஆக காட்சி தருகின்றமையும், இலங்கைப் பழங்குடிகளில் ஒருவராகிய இயக்கர் தலைவனாக இருந்தான் என்ற எண்ணமும் இலங்கையில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம் போன்ற சிவன் கோயில்கள் இருக்கின்றன என்பதாலும் திருமூலர் இப்பூமியை 'சிவபூமி' என்று குறிப்பிடுகின்றார்.

**தாமிரபரணியின் சிறப்பு**

வான்மீகி இராமாயணத்தில் குரங்குப்படைகளைத் தாமிரபரணி ஆற்றைக் கடந்து செல்லச் சொல்லும் இடத்தில் குறிப்பிடப்படுகிறது. வியாபாரத்தில் தாமிரபரணித்துறை புண்ணிய பட்டுத் துறைகளுள் ஒன்று எனச் சுட்டப்படுகின்றது. தாமிரபரணி என்பது இயல்பான பெயராக இருந்தாலும் மருவிய வழக்காக இருப்பினும் இது தமிழ்ப்பெயரன்று. தாமிரபரணியின் பொருளையும், அதன் தோற்றத்திற்குக் கூறப்படும் காரணங்களையும் நோக்கலாம்.

நீரில் செம்புச்சத்து இருத்தலே இதற்குக் காரணம். தாமிரம் என்பது செம்பு. இது வடமொழிச்சொல்; பொருனை என்ற சொல் பரணி எனத் திரிந்திருக்கக் கூடும் என்பது கால்டுவெல் கருத்து. எனவே, தாமரசத்து நிறைந்த இது தாமிரப் பொருநை என வழங்கப்பட்டு இதுவே தாமிரபரணி எனத் திரிந்திருக்கலாம்.

தாமர விருஷபர்ணம் என்பது (சந்தனமர இலை) என்ற வடமொழிப் பெயரினின்றும் மருவியதாக இருக்கலாம். அடுத்து இராவணன் தொடர்பையும் ஆரியர் தொடர்பையும் எடுத்துக்காட்டுவது முக்கியமானது. இச்சொல் "த்வீபராவன" என்று இருந்திருக்கவேண்டும் என்றும் அதுவே கிரேக்க மக்கள் நாவில் புகுந்து "தாப்ரபேனே" என்று ஆகியிருக்க வேண்டும் என்றும் மாக்ரிண்டில் என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். ✦


### தவறிவிட்டன

145/14, நாவலர் வீதி, ஐந்து சந்தியைச் சேர்ந்த பொன்னுத்துரை பாலசரஸ்வதி என்பவரது தேசிய அ.அட்டை (517353812V), விசேட அ.அ. (09010 20307) என்பன 04.08.2003இல் கட்டைப்பிராய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

ஸ்ரீ ராம் கஜன் மிக்சர்

இல. 7. பஸ்நிலையம். யாழ்ப்பாணம்.

(21116)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி பொன்னம்பலம்

ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் நேற்று (05.08.2003) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கா.சி.பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியாரும், இராசலிங்கம் (கனடா), பரமேஸ்வரி, சின்னராசா (ஜேர்மனி) காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் பூமணி (கனடா), காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் ஜோகேஸ்வரி (ஜேர்மனி), கனகலிங்கம், லோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2003) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

தகவல் :
க.பரமேஸ்வரி (மகள்).

(21125) (31-12-13)

## வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி)

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி) அவர்கள் 01.08.2003 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் சரஸ்வதிதேவி அவர்களின் அன்புக் கணவரும் மிதுலனின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2003) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெற்றுப் பூதவுடல் 10.30 மணியளவில் (பிரான்ஸ் நேரப்படி) Pere La Chaise மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சோதி மாளிகை'*
*நீலிப்பந்தனை,*
*காரைநகர்.*

தகவல்:
சகோதரர்கள்.

(21122) (32-12-13-31)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14★12★1955

மறைவு 07★07★2003

## திருமதி இராணி கிறிஸ்ரி

நினைவுகளில் உங்கள் பிரிவு கனவாக
நிஜமாக உள்ளத்தில் வாழ்கின்ற
அன்பிற்கே எடுத்துக்காட்டாய் வாழ்ந்த
அன்னையே நீவிர் எங்கே?
உள்ளத்தைக் கனக்க வைத்து
ஊமையாய் உறங்கிவிட்டீர்!
நித்தமும் உம் நினைவில்
கண்ணீராய் கரைகின்றோம்
ஆறுதல் கூற நீரும் நிஜமாக மாட்டீரா?

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

*வெயிலுகந்த பிள்ளையார் ஒழுங்கை,*
*செம்மணி வீதி, நல்லூர்.*

(21118) (31-12-13)

## தேவாலய திருவிழா

குருநகர்,ஆக6

யாழ். மரியண்ணை பேராலயத்தின் வருடாந்த திருவிழா இன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும்

தொடர்ந்து மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்று மாலை 5.30 மணிக்கு மரியன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ஓ-51)

### நாட்டில் அக்கறையுள்ளோர் தடுத்ததால்

# திருட்டு மணல் ஏற்றிவந்தோர் டிராக்டரை கைவிட்டுத் தப்பினர்!

## அரியாலைப் பகுதியில் சம்பவம்

வலிவடக்கு,ஓக.6

அரியாலைப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து வாகனத்தில் ஏற்றிச் சென்றவர்கள், நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்களிடம் சிக்கினர். அதனைத் தொடர்ந்து வாகனத்தைக் கைவிட்டு அவர்கள் தப்பியோடினர்.

கடந்த பல நாள்களாகவே அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கை இடம் பெற்று வந்தது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள்மட்டத்திற்கு தெரிவிக்கப்பட்ட போதிலும், கொழும்பிலிருந்து மேல் அதிகாரிகள்வர வுள்ளமையால், தாம் நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் -

மேல் அதிகாரிகள் வந்து கூறிய பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்- தெரிவிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிராக்டர் ஒன்றை நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்கள் தடுத்த தாகவும் -

அந்த டிராக்டரில் மணல் ஏற்றி வந்தவர்கள், டிராக்டரைக் கைவிட்டு ஓடித்தப்பிவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மணல் அகழ்பவர்கள் பெரும்பாலும் தனியார் காணிகளிலேயே மணலை அள்ளி வருவதாகவும் -

இதனைத்தடுப்பதற்கு, மணல் அகழப்படும் காணிகளின் உரிமையாளர்கள் அஞ்சுவதாகவும் - தம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று அவர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணம் என்றும் -

அறியமுடிகிறது.

(ஓ-86)

## மோட்டார் சைக்கிள் சுவருடன் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு!

தெல்லிப்பழை,ஓக.6

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி மதிலுடன் மோதியதில் அதனைச் செலுத்தி வந்தவர் தலையில் படுகாய மடைந்து உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஏழாலை கிழக்கைச் சேர்ந்த ரகு என்ற மகாலிங்கம் மகேஸ்வரலிங்கம் (வயது 27) என்பவரே படுகாய மடைந்து ஆஸ்பத்திரியில் உயிரிழந்தவராவார்.

உடுவில் வீதி வழியாக மருதனார்மடம் நோக்கி மோட்டார் சைக்கிளில் இவர் வந்துகொண்டிருந்ததாகவும் -

அப்போது வீதியின் குறுக்கே ஒருவர் சைக்கிளில் செல்ல முயன்றதாகவும் -

சைக்கிள் மீது மோதாமலிருக்க மோட்டார் சைக்கிளை திருப்பிய வேளை, அது நிலைகுலைந்து அருகில் இருந்த சுவர் மீது மோதியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்த மகாலிங்கம் மகேஸ்வரலிங்கம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

(ஓ-6-150)


## DEPARTMENT OF HEALTH SERVICES TEACHING HOSPITAL, JAFFNA

### CONSTRUCTION OF STAIRCASE OF DRUG STORES AUDITORIUM

01. Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Construction of Staircase of Drug Stares Auditorium will be closed at 10.00 A.M. on 23/08/2003.

Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna up to 16/08/2003 on payment of a non-refundable fee of Rs: 250/=

2. Tenders will be opened immediately after the closing at the Office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized. representatives are requested to be present at the opening of tenders.

3. Tender Forms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).

4, Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna, or deposited in the Tender Box kept at the address appearing below, to receive before the closing time.

5. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's Office, CECB, Teaching Hospital, Jaffna.

6. For further details please contact A.O. G.H. Jaffna.

Dr.S. Sathurmugam, Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna.

(சி-29327) (31-12-18)



**விண்ணப்பப்படிவம்**

பாடசாலை சீருடை விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தயா அச்சகம்**

(செயிர்பூட் ஒவ்பிரெட் பிரிண்ட்)
138. நாவலர் பாடசாலை முன்பாக.
T.P.2881

**லஷ்சுமி சினிமா** இனுவில்

இன்று முதல்
அர்ஜூன், மனிஷாகொய்ராலா, வடிவேல், மணிவண்ணன் இன்னும் பலர் நடிப்பில்

**முதல்வன்**

பு.நேரம்: 11.00,3.00,7.00.
(21121) (31-12-18)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜூன், கிரண், கவுண்டமணி நடித்த
**பரசுராம்** (தமிழ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பு.நே.)
**The World Is Not Enough**
இரவு 7.00 (பு.நே.) (007)
(C29232) (31-12-18)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

சரதகான், அஜித் நடித்த
**சாம்ராட் அசோகா**
(ஹிந்தி படத்தின் தமிழாக்கம்)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**Red Scorpion**
தினசரி 8.45 இரவு.
(C29233) (31-12-18)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி** (தமிழ்)
தினசரி: 10.30,2.30,6.30,
(C29235) (31-16-18)

**லிபேட்டி** அச்சுவேலி

அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
**சிட்டிசன்** (தமிழ்)
தினசரி: 11.00. 3.00. 7.00 (பு.நேரம்)
(C/29231) (31-16-18)


## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் இராசரத்தினம் (சாமியார்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், இலகையடி கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசரத்தினம் நேற்று (05.08.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் செல்லமுத்து, பஞ்சலிங்கம், அருள்நாதன், சிவலிங்கம், உருத்திரதேவி, நீலமேகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கதிரவேலு, தேவி, குணமணிதேவி, தவரோஜினி, பஞ்சலிங்கம், பாலகுஞ்சிதம் ஆகியோரின் மாமனாரும் பௌந்தினி, வெங்கடேஸ்வரன், கோகிலன், மைதிலி, கந்தகுமார், வைதேகி, கேசவதாஸ், யூயூதனன், நித்தியா, சிவராகினி, திருமால், ஆதவன், பவதாரணி, திருமகள், சியாமினி, சியாமளன் ஆகியோரின் பேரனும் பிரியங்கா, இராமருபன், தரணியா, தனுசனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மோகன் (மகன்).

இலகையடி,
கோப்பாய் வடக்கு. (C29334) (32-12-18-31)

### புதியார் இராசையா

இடைக்காட்டை (தேற்றாவடி) பிறப்பிடமாகவும், உடுத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட புதியார் இராசையா (பூசாரி இராசையா) நேற்று (05.08.2003) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மம்பத்தவளவு,
இடைக்காடு.

தகவல்:
விக்கினேஸ்வரி சடாச்சரம் (மகள்).

(21129) (32-12-18-31)


## வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு (ஆண்கள் மட்டும்) முன் அனுபவமுள்ள வேலை ஆள் (சிற்றூழியர்) தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும் பத்தக்கது.

தகுதியானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 2567

(C29326) (32-12-18)



## நன்றி நவில்கின்றோம்

எமது மானவ சமுதாயத்தின் தேவை அறிந்து யாழ்.நகரில் aat பரீட்சையை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்ட யாழ்.இணைப்பாளர்

**திரு.க.கமலேஸ்வரன் (MAAT)**

கணக்காளர் அவர்களுக்கு யாழ். கல்விச் சமூகம் சார்பில் எமது நன்றிகள்.

**CAREER.COM INSTITUTE**
**No. 79, MAIN STREET, JAFFNA.**

(C29332) (32-12-18-31)


## பருத்தித்துறை பிரதேச சபை காலநீடிப்பு கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்கு 'இக்ராட' இல் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கால நீடிப்புக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| படிவ விநியோகம் | :- 18.08.2003ஆம் திகதி நண்பகல் | 12.00 மணிவரை |
| படிவம் ஏற்றல் | :- 19.08.2003ஆம் திகதி நண்பகல் | 12.00 மணிவரை. |
| படிவம் திறத்தல் | :- 19.08.2003ஆம் திகதி பிற்பகல் | 14.00 மணிக்கு |

### அட்டவணை

| வேலை விவரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற் வரி |
|---|---|---|---|
| 01. குடத்தனை கடற்கரை வீதி திருத்தம் | 5,000/- | 100/- | 20.00 |

கேள்வி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு 'செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி' என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ படிவமேற்றல் திகதி, நேரத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*பருத்தித்துறை பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*புலோலி.*
*04.08.2003.*

அ.அ. நடராசா,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(சி-29324) (31-12-18-31)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் வேலவன் ஐயம்பிள்ளை



தோற்றம்
05.04.1933

மறைவு
07.07.2003

அன்பின் திருவுருவே!
எம் இறைவன் இல்லங்கே!
எந்நாளும் ஆன்றோர் சென்றாலும்
எம் மனதில் உம் நினைவு நீங்காது!

தில்லையம்பதி,
கோண்டாவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(21128) (32-12-18-31)

# அரும்பொருள் பாதுகாப்பு நடுவம் தலைவரின் நீண்ட கால எதிர்பார்ப்பு

## அங்குரார்ப்பண விழாவில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.6

தமிழீழத் தேசியத் தலைவரின் நீண்டகால எதிர்பார்ப்பை செயற்படுத்தும் வகையில் தமிழீழ அரும்பொருள் பாதுகாப்பு நடுவம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழீழ அரும்பொருள் பாதுகாப்பு நடுவத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துகையிலேயே அரசியல்துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டங்கள் தோறும் எங்களுடைய வரலாறுகளை, வரலாற்று ஆவணங்களை, பதிவுகளை மற்றும் சமகால வரலாறுகளை பேணிப் பாதுகாக்கின்ற ஒழுங்கமைப்பை மேற்கொள்ளவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான் நாம் இந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளோம்.

தற்போதுள்ள சூழல் எமக்குச் சாதகமாக உள்ளது. இந்த நேரத்தில் இத்தகைய அமைப்பினை நிறுவி செயற்பாடுகளை தீவிரமாக்கவுள்ளோம். கடந்த சில நாள்களாக நான் தென்தமிழீழத்தில் தங்கியிருந்தபோது பல வரலாற்றுச் சான்றுகளைக் காணமுடிந்தது. ஆனால், அந்த வரலாற்றுச் சான்றுகளைப் பேணக்கூடிய சூழல் அங்கே இல்லை.

எனவே, வரலாற்றுச் சான்றுகளைப் பேணும் மனநிலையை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும். எங்களை ஆக்கிரமித்து நிற்பவர்கள் தமது வரலாற்றுச் சான்றுகளைப் பேணுவதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

திருகோணமலையிலுள்ள ஒரு பகுதியில் காலங்காலமாக இருந்த எங்கள் மக்களின் கோயில் சூழலில் இருந்து எமது மக்கள் விரட்டப்பட்டு அவ்விடம் பௌத்த கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

பின்னர் அப்பகுதி எமது போராளிகளால் மீட்கப்பட்டு மக்களினால் மீண்டும் அந்த இடத்தில் பிள்ளையார் ஆலயம் ஒன்று உருவாக்கப்பட்டது.

உண்மையில் எமது பிரதேசங்களை மீட்டுச் செல்லும் வேளையில் நாங்கள் எமது வரலாற்று ஆவணங்களை ஆவணப்படுத்திக்கொள்வதும், பேணிக்கொள்வதும் உயரிய பணியாகும்.

நாம் போராட்டத்தில் அர்ப்பணிப்புடனும் தீவிரமாகவும் செயற்பாடுகளை வகுத்துச் செல்கின்றோம். அதேபோன்று உரமான உழைப்பினூடே வரலாற்று ஆவணங்களை, சான்றுகளைப் பேணுவதிலும் நாங்கள் அக்கறை காட்டவேண்டும். இதுவே எமது தேசியத் தலைவரின் விருப்பமாகும் என்றார் அவர். (ஓ-5-9)

---

### அனுமதி...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பி.எதுசூரிய ஆகியோரே இத்தீர்ப்பை நேற்று வழங்கினர்.

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டன.

முதலாம், ஐந்தாம், 9ஆம், 16 ஆம் மனுதாரர்கள் 3 அதிதிறமைச் சித்திகள் பெற்றிருந்தும் கூட மருத்துவ பீடத்திற்கு அவர்களைத் தெரிவுசெய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தவறிவிட்டது என மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

ஏனையோரும் 2 அதி திறமைச் சித்திகளும் ஒரு திறமைச் சித்தியும் பெற்றிருந்தனர். 1.8573 இஸட் புள்ளிகள் பெற்ற ஐந்தாம் மனுதாரரை ஒதுக்கிவிட்டு 1.6772 புள்ளிகள் பெற்ற வேறு ஒருவருக்கு மருத்துவ பீடத்தில் இடம் வழங்கப்பட்டது. இது அரசமைப்புச் சட்டத்தின் 12(1)பிரிவின் கீழ் அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கையாகும் என மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தமது தீர்ப்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியாயமற்ற முறையில் நடந்து கொண்டதுடன் அரசமைப்புச் சட்டத்தின் 12(1) பிரிவின் கீழ் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

---

### தொண்டரைத்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பிடிபட்ட இளைஞர் குழுவை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் அழைத்துச்சென்று கடும் எச்சரிக்கை செய்து அனுப்பியதாகக் கூறப்படுகிறது. (ஓ-86-ரி)

---

### அரும்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சின்னங்களைப் பேணல் என்பனவே தமிழீழ அரும்பொருள் பாதுகாப்பு நடுவத்தின் முக்கிய நோக்கமாக இருக்கு மென்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான யாப்பு வரைவு தற்போது நடைபெற்று வருகின்றது. அரும்பொருள்களை அழித்தல், விற்பனை செய்தல் என்பன சட்டவிரோதமாக கணிக்கப்பட்டு அவற்றுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி.இராசநாயகம், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான சனாதனன், அகிலன், மட்டக்களப்பு விரிவுரையாளர் ஜெயசங்கர், பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள், தமிழீழ காவல் துறையினர் மற்றும் நிதி நிர்வாகத் துறையினர் உட்பட பலர் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஓ-5-9)

---

### பல்வேறு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பொதுமக்கள் தமது நகைகள், பொருள்கள் என்பவற்றில் அவதானமாக இருக்குமாறும், குழந்தைகள், சிறுவர்கள் நகைகள் அணிவதைத் தவிர்ப்பது நல்லது என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

நல்லூர் உற்சவத்தையொட்டி நேற்றுமுன்தினம்முதல் தடைநிலைகளில் பொலீஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

---

### நிப்பொன் புலமைப்பரிசில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.6

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையத்தினால் வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கள் இன்று புதன்கிழமை தொடக்கம் யாழ். மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நிலையத்தின் இணைப்பாளரான யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார். (ஓ-10)

---

### யாழ்....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இப்பகுதியில் மேற்கொள்பவர்கள் கடுமையான விளைவுகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் உரிய தரப்பினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்பதை அறியத்தருகின்றோம் என்று இந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-ரி)

---

### 1,454 பாதுகாப்பு....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வந்தபோது வடக்கு-கிழக்கில் இருந்த பாதுகாப்பு நிலைகள் எத் தனை? இதுவரை வடக்கு-கிழக்கில் அகற்றப்பட்ட பாதுகாப்பு நிலைகள் எத்தனை? மேலும் அகற்ற உத்தேசிக்கபபட்டிருக்கும் நிலைகள் எத்தனை? என்று ஜெயராஜ் எம்.பி. கேள்விக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார். சபையில் நேற்றுக் காலை இக்கேள்வி எழுப்பப்பட்ட போது அவர் சபையில் இருக்கவில்லை.

கேள்விக்கான பதிலை சபாநாயகர் முன் சமர்ப்பித்து அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணி அரசு 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி பதவிக்கு வந்தபோது வடக்கு-கிழக்கில் முப்படைகளினதும பொலீஸாரினதும் முகாம்கள், பொலீஸ் நிலையங்கள், காவலரண்கள், வீதிச் சோதனைச் சாவடிகள், பதுங்குகுழிகள் என ஆயிரத்து 454 பாதுகாப்பு நிலைகள் இருந்தன. அவற்றில் பொலீஸ் நிலையங்கள் 51, இராணுவ முகாம்கள் 66, காவலரண்கள் 293, வீதிச் சோதனைச்சாவடிகள் 85, பதுங்க குழிகள்959.

இவற்றில் இதுவரை 56 பாதுகாப்பு நிலைகள் அகற்றப்பட்டிருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள உகன வீரகொட சோதனைச் சாவடி அகற்றப்படவுள்ளது.

- இவ்வாறு அவர் பதிலளித்தார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னரும் பின்னரும் கொல்லப்பட்ட படையினர் எத்தனை பேர் என்ற மற்றொரு கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பதிலளிக்கையில் கூறியதாவது:-

ஒப்பந்தம் செய்யப்படும் வரை 14பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் இராணுவ வீரர், மூவர் கடற்படையினர், ஒருவர் விமானப் படை வீரர், 9பேர் பொலீஸார்.

ஒப்பந்தத்தின் பின்னர் 25 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் நால்வா இராணுவத்தினர், 8பேர் உளவுப்படையினர், 11பேர் சிவில் படையினர் இருவர் பொலீஸார்.

- இவ்வாறு பதிலில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே வடக்கு - கிழக்கில் தற்போது அகற்றப்பட்டிருக்கும் பாதுகாப்பு நிலைகள் நான்கு சதவீதத்துக்கும் குறைவானவை என்று கூறப்படுகிறது.

---

### சித்தமருத்துவ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், துணைவேந்தரின் கடிதம் ஒன்றை ஒப்படைப்பதற்காக மருத்துவ பீட உபயோகத்தில் உள்ள வானில் அதன் சாரதி கைதடி சித்த மருத்துவத் துறைக்கு நேற்று முற்பகல் 11மணியளவில் சென்றதாகவும் -

அங்கு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சித்த மருத்துவ மாணவர்கள் அந்த வானை முற்றுகையிட்டு தடுத்து வைத்திருந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து குழு ஒன்று கைதடி சென்றது.

சித்த மருத்துவத்துறையை பீடமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முகாமைத்துவக்குழுவின் தலைவர் பேராசிரியர் சு.வே.பரமேஸ்வரன், உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், முகாமைத்துவ வணிக பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், மருத்துவபீட மாணவர் ஒன்றிய உதவித் தலைவர் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

இக்குழுவினர் கைதடி சென்று சித்த மருத்துவ மாணவர்களுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து வானை மாணவர்கள் விடுவித்தனர். (ஓ-5-9-12)

---


**திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்

**தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி**

எமது மன்றம் செப்ரெம்பர் மாதம் நடத்தவிருக்கின்ற நாட்டுக்கூத்து வழாவின் ஓர் அம்சமாகவும் பாரம்பரிய கலைகளைப் பேணுகின்ற நடவடிக்கைகளில் ஒரு செயற்பாடாகவும் இப்போட்டி நடத்தப் படவுள்ளது.

★ போட்டிக்கான பரிசுத்தொகை

முதலாம் பரிசு - 8,000 ரூபா
இரண்டாம் பரிசு - 6,000 ரூபா
மூன்றாம் பரிசு - 4,000 ரூபா

★ போட்டி விதிகள்

1. நாட்டுக்கூத்துக்கள் ஒருமணி நேரத்துக்குள் அமைந்திருக்க வேண்டும்.
2. பாரம்பரியமான பழைய நாட்டுக்கூத்துப் பிரதிகளை ஆற்றுகை செய்தலே விரும்பத்தக்கது. எனினும் புதிய கூத்துக்களை படைக்க விரும்பவர்கள் மரபு வழிக் கூத்தின் கட்டமைப்புக்குள் நின்று படைக்கலாம்.
3. யாழ்.மாவட்டத்திலுள்ள தனிநபர்களும் நிறுவனங்களும் மட்டுமே இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
4. போட்டிக்கு விண்ணப்பிப்போர் ஆற்றுகை செய்யும் நாட்டுக்கூத்து பிரதியை முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும்.
5. போட்டிக்கான இறுதி முடிவு நடுவர்களுடையதே.
6. திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களோ அல்லது அவர்களால் நெறியாள்கை செய்யப்படும் படைப்புக்களோ இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.
7. விண்ணப்ப முடிவு திகதி 18.08.2003 திங்கட்கிழமை
8. போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
"தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி"
பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்,
238,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சி-29325) (31-12-18-)



**கண்ணீர் அஞ்சலி**



**திருமதி ஜெயமாலா மகாதேவன்**
(வலி. தெற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்)

மலர்வு 1962 .09 . 03

உதிர்வு 2003 . 08 . 02

கனிவான திருமுகத்தைக் காண்போமா இனி நாம்
இனிமையான பேச்செங்கே? முல்லைச் சிரிப்பெங்கே?
முத்தான முழுநிலவு எங்குதான் மறைந்ததோ?
என் செய்வோம்?

- குடும்பத்தினர்.

"ஜெயநிகேதன்"
பங்களா லேன்,
மல்லாகம்.

(21090) (31-13-12)



**வெற்றிடம்**

பிரசித்தி பெற்ற தேவஸ்தானத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் தங்களுடைய சகல சுய விவரங்களுடன் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு 12.08.2003 இற்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

பதவிகள்: 1. குருக்கள்
2. பரிசாரகர்

விண்ணப்ப முகவரி: விளம்பர இல.1977
மே/பா- உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-29315) (12-13-31)



**இலவசம்! - இலவசம்! - இலவசம்!**

எம்மிடம் எடுக்கும் கொழும்பு - யாழ் - கொழும்பு விமான ரிக்கெற்றுகளுக்கு சகல வெளிநாடுகளுக்கும் 15 நிமிடங்கள் தொடக்கம் 30 நிமிடங்கள் வரை இலவச தொலைபேசி வெளி அழைப்புக்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

**K.S.M. தொடர்பாடலகம்**
146, நவீன சந்தைக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

021 - 222 - 2007
021 - 222 - 6431
021 - 222 - 3079
021 - 222 - 2508

(C29333) (32-13-31)



**சிறீஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
**ENGLISH CLASS**
புதிய பிரிவு ஆரம்பம்
இன்று 06.08.2003 பி.ப.3மணி
By: சடகோபன்
(12-13-31) (C-29313)



**A/L 2005**
வரலாறு
by: S. சுஜிகரன்
ஆரம்பம்
07.08.2003 மாலை 3.30 மணி
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
(21112)(12-13-31)



**ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு**

SSA 250M - 250W அம்பிளிபயர்
SSB 80EM - 80W அம்பிளிபயர்
AMX 912 - 9 சனல் மிக்ஸ்சர்கள
HMT 30 - லைன் ரான்ஸ்பர்கள
40 WATS யூனிற்றுக்கள
G.S. 18",24" நீளக்கோண்கள்
அனைத்தும் புதியவை

தொடர்பு:-
'கோபுரம் சவுண்ட்ஸ்'
அவுஜா ஒலிபெருக்கி சாதனங்கள விற்பனையாளா.
M.மயூரன்
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில.
(21107) (13-31)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக

# கல்வித்தரத்தில் பின்னடைவுகளே தவிரவும் வீழ்ச்சி எனக் கூறமுடியாது!

## கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் கருத்துரை

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்ததாகக் கூறமுடியாது. கல்வித்தரத்தில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு குறைபாடுகள் காரணமாக ஏற்பட்டுள்ள இப்பின்னடைவை சீர்செய்வதன் மூலம் கல்வியின் உயர்தரத்தைத் தொடர்ந்து நாம் பேணமுடியும்.

தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெற்ற 'யாழ். மாவட்டத்தின் கல்வித் தரத்தின் அண்மைய போக்கு' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்ற இக்கருத்தரங்கிற்கு றொட்டேரியன் அ.பஞ்சலிங்கம் தலைமை வகித்தார்.

கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் வழங்கிய கருத்துரையில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அண்மையில் பலராலும் கூறப்படுகின்றது. கல்வி முறையில் பல குறைபாடுகள் காணப்படுவதால் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறைபாடுகளை நாம் நிவர்த்தி செய்கின்றபோது கல்வியின் தரம் மேம்பாடடையும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கல்வி மேம்பாட்டை முன்னெடுகக சரியான கல்விக் கொள்கையைத் திட்டமிட்டு நாம் செயற்படுத்தவேண்டும்.

### எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

யாழ். மாவட்டத்தில் கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் இன்று எதிர்நோக்கப்படுகின்றன. தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள், ஆசிரியர்களிடம் உள்ள கற்பித்தல் குறைபாடுகள், இன்றைய போர்ச் சூழல், ஆசிரிய வளச் சமபங்கீடின்மை, சரியான முறையில் கோட்ட, வலய மட்ட செயற்பாடின்மை, அதிபர்களிடம் உரிய முகாமைத்துவமின்மை, கற்றல் செயற்பாட்டுக்குரியதான வகுப்பறைகள் இன்மை, பிழையான சமூக எண்ணக் கருத்துக்கள், திட்டமிடாத பல பாடசாலை நிகழ்ச்சிகள் போன்ற பல பிரச்சினைகளும் கல்வியின் இன்றைய பின்னடைவுக்குக் காரணமாகின்றன.

### பாடசாலைக் கட்டமைப்பு

பாடசாலைக் கட்டமைப்பினை ஒவ்வொரு நாடும் தத்தம் கல்விக் கொள்கைக்கமைய தீர்மானிக்கின்றன. இதனால், உலக ரீதியான ஒருமைப்பாடு காணப்படவில்லை.

ஸ்ரீலங்காவின் கல்விக் கட்டமைப்பு - புதிய நிர்வாகக் கட்டமைப்புகளிலும் கல்விச் செயற்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் அது ஒரு பொது நிர்வாக கட்டமைப்பாக அமைகின்றது.

மாணவர்களுடைய மதிப்பீடுகள், கணிப்பீடுகள், எல்லாம் ஒரு பொதுத் தேர்வு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இக்கணிப்பீடுகளுக்கு மாணவரை தயார்படுத்துபவையாக பாடசாலைகள் விளங்குகின்றன.

### வகுப்பறைக் கற்பித்தல்

வகுப்பறைக் கற்பித்தலில் காணப்படும் சில தளர்வுகள் தொய்வுகளுக்கு வகுப்பு ரீதியாக நாம் விடுக்கின்ற கல்விமுறைக் குறைபாடுகளே காரணம்.

முறைசார்ந்த கல்வி முறையிலே வகுப்பறைக் கற்றலானது கல்வி மேம்பாட்டில் ஒரு புனிதமான இடத்தைப் பெறுகின்றது. வகுப்பறைக் கற்றல் நடவடிக்கையில் ஓர் ஆசிரியர் வெற்றி பெற அதிபருடைய முகாமைத்துவ அனுசரணைகளை முழுமையாகப் பெறவேண்டும்.

### மாணவனை மையமாகக்கொண்ட கல்வி

மாணவனை மையமாக வைத்துக் கொண்டு கல்வியை முன்னெடுக்கின்ற போது பாடசாலைகள் மாணவனின் தகுந்த கற்றலை வளர்த்துக்கொள்ளும் ஒரு நிலையமாக அமைகின்றன.

உளவியலாளர்களும் கல்வியியலாளர்களும் கற்றலை பலவகைகளில் வரிசைப்படுத்துகின்றனர். ஒரு குழந்தை, தாயின் கருவில் இருக்கும்போதே கற்கத் தொடங்குவதாகவும், தாயின் மடிதான் குழந்தையின் முதல் பாடசாலை என்றும் கூறுகிறார்கள்.

ஒரு கல்வித் திட்டத்துக்கமைய ஐந்து வயது நிரம்பிய குழந்தை பாடசாலைக்கு வரும்போது ஒரு பொது அடிப்படையில் பாடப்பரப்புகள் வரையறுக்கப்பட்டு தவணை ரீதியான பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

வகுப்பறைக் கற்றலின்போது அக்குழந்தை பல்வேறுபட்ட தன்மைகளை அவதானிப்பதோடு, ஆசிரியரானவர் வகுப்பு ரீதியாக கற்பிக்கின்றார் என்பதை அறிந்துகொள்கிறது.

பல ஆசிரியர்களை அவன் சந்திக்கின்றபோது வகுப்பறையானது அக்குழந்தைக்கு மகிழ்ச்சிகரமான இடமாக அமைந்திருக்கவேண்டும். ஐந்தாம் ஆண்டுவரை மகிழ்ச்சிகரமான ஒரு பாடப்பரப்பையும் செயற்பாடுகளையும் ஆசிரியர் பின்பற்ற வேண்டும்.

மாணவனின் கல்வி மேம்பாட்டிற்கான அடித்தளத்தை இடும் கட்டமைப்பாக வகுப்பறை விளங்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப ஆசிரியர் பற்றாக்குறை கூடுதலாக உள்ளது. மாணவனின் கல்வி மேம்பாட்டிற்கும் சீரான கற்றலுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை ஒரு பெரும் குறைபாடாகும். தொடர்ச்சியாக வரும் புதிய பல கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய ஆசிரியர்கள் அடிக்கடி மாறுவதால் மாணவர்கள் திட்டமிட்டபடி கல்வியைப் பெறமுடியாதுள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறை மட்டுமல்ல, ஆசிரிய இடமாற்றங்கள், ஆசிரியரின் நடத்தைகள் என்பனவும் தவறுகளை ஏற்படுத்தக் காரணமாய் அமைகின்றன. இதனால் மாணவன் மேல் வகுப்புக்குப் போகும்போது அவன் அடிப்படைத் திறமைகளைப் பெறமுடியாது போகின்றது.

காலத்துக்குக் காலம் பயிற்சிகளும் திட்டங்களும் வழிகாட்டல்களும் இருந்தும்கூட கற்பிப்பதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு வகுப்பறைகளில் ஆசிரியர்கள் செயற்படும் தன்மை இன்னமும் காணப்படுகின்றது. கரும்பலகைகளையும் வெண்கட்டிகளையும் பயன்படுத்தும் நிலையே தொடர்கின்றது.

### வகுப்பறை என்பது கற்கும் இடம்

மாணவர்களுக்கு கற்பிக்கின்ற இடமாக அன்றி மாணவர் கற்கும் இடமாக வகுப்பறைகள் மாறவேண்டும். ஆசிரியர்கள் புத்தகங்களை வாசித்துக் காட்டுகின்ற இடமாக வகுப்பறை அமையாது, மாணவன் ஆசிரியரிடம் கற்கும் தன்மையும், சுயதேடலாகவும், குழு முயற்சியாகவும், செயற்பாட்டு ரீதியிலான கற்றலாகவும் வகுப்பறைக் கற்றல் அமையவேண்டும்.

கவர்ச்சிகரமான கற்பித்தல் மட்டுமல்ல; கற்றல் செயற்பாட்டின் உன்னதமான இடமாக வகுப்பறை அமைய வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் மட்டுமல்ல; மேல்வகுப்புகளில்கூட ஆசிரியர்கள் கையிலே தடி இல்லாமல் கற்பிக்கமுடியாத நிலையே இன்று காணப்படுகின்றது. பிள்ளையை அடித்து, காயப்படுத்தி, அவனிடம் சுதந்திரமில்லாத ஒரு நிலையை ஏற்படுத்தினால் மாணவன் கற்றலை சரியாகப் பெற்றுக்கொள்ளமாட்டான்.

தொகுப்பு:
**வி.பி.சர்மா**
*வலி.தெற்கு செய்தியாளர்*

வகுப்பறை ரீதியாக மேற்கொள்ளபபடும் மதிப்பீடுகள் ஆசிரியரின் கற்பித்தல் வளர்ச்சியையே காட்டும். அண்மையில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது அப்பெறுபேறுகள் ஓர் ஆசிரியரின் தரக்கணிப்பீடாகவே அமைகின்றன. மாணவரை மையமாக வைத்து அவர்களின் தன்மைகளுக்கேற்ப திட்டங்களை வகுத்து நாம் செயற்பட வேண்டும்.

புத்தகங்களை வாசிக்கின்ற முறையில் - மனனம் செய்யக்கூடிய முறையில - புத்தகங்கள் அமையவில்லை. மாணவன் புத்தகங்களை வாசித்து விளங்கித் தொடர்ந்து தனது அறிவியலைத் தேடிக்கொள்ளக்கூடியதான கல்வி முறைகள் வகுப்பறையில் இருக்கவேண்டும்.

### ஆசிரியரிடையே ஒத்ததன்மை இல்லை

பயிற்சி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர். கல்விக்கல்லூரி ஆசிரியர் என பல தரப்பில் ஆசிரியர்கள் நியமனம் பெற்றாலும் அவர்களிடையே வகுப்பு ரீதியிலான செயற்பாட்டில் ஒத்த இயல்புத் தன்மை இல்லாமல் உள்ளது. ஆசிரிய ஆலோசகர்கள் இவர்களிடையிலான பிரச்சினைகளை விளங்கி, ஒத்ததன்மையை ஏற்படுத்தக்கூடிய ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக ஒரு வகுப்பறையில் 50இற்கு மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கி வைத்து செய்யப்படும் கற்பித்தல முறையில் சரியான கற்றலை வழங்க முடியாது. கணிப்பீடுகளின்போது வழங்கப்படும் ஒப்படைகளை மாணவன் பெற்றோரைக் கொண்டு அல்லது பிறருடைய முயற்சியால் மேற்கொள்கின்றான். இதனால் அவனது சுயதேடலுக்கென வழங்கப்படும் புள்ளிகள் இன்னொருவருடைய வேலைகளுக்கு வழங்கப்படும் புள்ளிகளாக அமைகின்றன.

ஆசிரியர்கள் நேர்மையாக புள்ளிகளை வழங்கமுன்வந்தாலும் இவ்வாறான போக்கு சரியான முறையில் அமையாது. ஆசிரியர்களும் தம் மனம்போன போக்கில் சிவப்பு - பச்சை என புள்ளிகளை வழங்கி விடுகின்றனர். மாணவரையும் மேலதிகாரிகளையும் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்படும் இச்செயலால் மாணவன் பாதிப்படைகின்றான்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பல நிகழ்ச்சிகள் மாணவரின் பெறுபேறுகளுக்காக அந்தந்த நாள்களில் கிடைக்கக் கூடிய பல கற்றல்களை இழக்கவைக்கின்றது. நிகழ்ச்சிகளை திட்டமிட்டு நடத்தாமையால் கூடிய நாள்களை பிரத்தியேகமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தவேண்டி உள்ளது.

ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்போது மாணவன் கற்கின்ற ஒரு சூழலை ஏற்படுத்தவேண்டும். வகுப்பறை என்பது கற்கின்ற ஒரு நிலையம். கற்கின்ற நிலையை ஏற்படுத்தினால் மாணவனிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளைப் பெறமுடியும்.

பாடசாலை முகாமை சரியான முறையில் நிர்வகித்து ஆசிரியர்கள் பாடரீதியாக - பாட அலகு ரீதியாக - வகுப்பு ரீதியாக - மாணவரின் தரத்தை இனங்கண்டு வகுப்பறைக் கல்வியை முன்னெடுத்தால் நிச்சயம் பல அடைவுகளைப் பெறமுடியும். இன்றைய கல்வித்தர தொய்வினை சீர்படுத்த முடியும் - என்றார்.

---

## பாடசாலை சீருடைக்கு பதியுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.6

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு வழங்கப்படவுள்ள இலவச சீருடைத் துணிக்கான பதிவுகளை இப்போதே செய்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

பாடசாலை அதிபரிடம் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று, பூர்த்தி செய்த படிவங்களை கிராம அலுவலக உத்தியோகத்தரிடம் கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறும் -

பாடசாலை விடுமுறை தினங்களில் இவற்றுக்கான பதிவுகளைச் செய்துகொள்வது இலகுவாக அமையும் என்பதால் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இப்பதிவுகளை செய்துகொள்ளுமாறும் - பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ம-6)

## கசிப்பு வழக்கில் மூவருக்கு ரூ.26,000-அபராதம்

தெல்லிப்பழை,ஓக.6

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் மூவருக்கு மல்லாகம் நீதிமன்றினால் 26ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புத்தூர், நவக்கிரியைச் சேர்ந்த ராசன் கந்தசாமி என்பவருக்கு 18 ஆயிரம் ரூபாவும், அச்செழுவைச் சேர்ந்த சிவபாலன் இந்திராணி என்பவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த மாரிமுத்து சற்குணம் என்பவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

(ம-10-150)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கான ஆசனப்பதிவை மேற்கொள்ளும் முகவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு இல.50 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிற்றூர்தி சேவைச் சங்க இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல முகவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

## ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மடுத் தேவாலயத்துக்கு பஸ் சேவை

மன்னார்,ஓக.6

மடுத் தேவாயலத்துக்கு செல்லும் தெற்கு யாத்திரிகர்களின் நலன் கருதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தேவாலயத்துக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மடுமாதா ஆலய உற்சவத்தையொட்டி இந்த பஸ் சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது காலை 6 மணிக்குத் திறக்கப்படும் மடு சோதனைச் சாவடி மாலை 6 மணிக்கு மூடப்படுகிறது.

எனினும், மடு உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் மடு சோதனை நிலையம் இரவு 10 மணிவரையும் 14,15ஆம் திகதிகளில் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை மடுத்தேவாலய உற்சவத்துக்கு குறைந்தது 4 லட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு ஏற்றவகையில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதென மடுத் தேவாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்த 18பேர் மீது நீதிமன்றில் வழக்கு தாக்கல்

### நல்லூர் பிரதேச சபை அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.6

சட்டவிரோதமான முறையில் கட்டடங்களை அமைத்த 18 வீட்டு உரிமையாளர்கள் மீது நல்லூர் பிரதேச சபையினர் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில் பகுதிகளில உள்ளவீட்டு உரிமையாளர்கள் மீதே கடந்த வாரம் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் ச.செல்வரத்தினம் தெரிவித்ததாவது:-

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எந்தவொரு கட்டடங்களை அமைக்கும்போதும் எமது அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

இவ்வாறு அனுமதியைப் பெறுமாறு வலியுறுத்துவது எமது சுயநலத்திற்காக அல்ல. எந்தவகையிலும் பிறருக்கு இடையூறாகவோ, சட்டவிதிகளை மீறுவதாகவோ கட்டடங்கள் அமைந்துவிடக்கூடாது என்பதற்காகவே.

எனினும், பலர் இதனைப் பொருட்படுத்துவதில்லை. நாமும் செவிடன் காதில் சங்கு ஊதுமாப்போல் இவ்விடயம் பற்றி பல தடவைகள் கூறி எந்தப்பயனும் இல்லாது போன நிலையிலேயே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். இனிமேலாவது கட்டடங்களைக் கட்டும்போது சரியான முறையில் பிரதேச சபையின் அனுமதியை மக்கள் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும் - என்றார்.

(ம-12)

## காரைநகர், ஊர்காவற்றுறைக்கு குடிதண்ணீர் வழங்க விசேட திட்டம்

### 4 லட்சம் ரூபா செலவில் செயற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.6

காரைநகர் மற்றும் ஊர்காவற்றைப் பகுதிகளில் குடிதண்ணீர் இல்லாத இடங்களில் உள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டத்தை யாழ். மாவட்ட செயலகம் முன்னெடுக்கவுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் அந்தப் பிரதேச சபைகளூடாக குடிதண்ணீர் கிடைக்காத இடங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதியில் சில இடங்களில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இங்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கென சமூக நலன்புரி அமைச்சு 4 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதேவேளை -

புங்குடுதீவுப் பகுதியிலும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அங்கும் குடிதண்ணீர் விநியோகத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் யாழ். செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Italy Vespa Scooter 83 Sri, Sharp Cassetd Player (Double) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 850, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2843 சனிக்கிழமை தவிர மற்றைய நாள்களில் பார்வையிடலாம்.(21109)

தனிப் பாவனையிலுள்ள 7 ஸ்ரீ XXX மொறிஸ் மறீனா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிறேமநாயகம் ஜெயதாஸ் மேரி சந்திரா (சாந்தி), 17/2A, புனித அன்னாள் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு. T.P. 3360. (20975)

## தவறிவிட்டது

புத்தூர் மேற்கைச் சேர்ந்த பரமன் முருகேசு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.533363806V), மற்றும் வன்னிக்குச் செல்லும் நிரந்தர பாஸ் என்பன 02-08-2003 அன்று புத்தூருக்கும் மட்டுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள புத்தூர் அம்பாள் புடைவை அகத்தில ஒப்படைத்துதவவும். (21111)

லொறியின் வீல்கப் ஒன்று பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தி, சுன்னாகத்துக்கிடையில் தவறிவிழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை வீதியிலுள்ள குட்டி அண்ணையின் கராஜில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (21089)

## வீடு விற்பனைக்கு

யாழ்.கலாசாலை வீதி, திருநெல்வேலியில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 581361, 0722118447. (சி-29314)

## வீடு வாடகைக்கு

சந்தனமாதா கோவில் ஒழுங்கை, கொழும்புத்துறைப் பகுதியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: R.சவுந்தரநாயகம், இல. 12/21, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 021 - 222 6056 நேரில்வரவும். (21062)

## வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் ஆஸ்பத்திரி வீதி - ஸ்ரேசன் சந்திக்கு அருகிலுள்ள இல.6/1, பேக்கரி ஒழுங்கையில் மூன்று படுக்கையறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: க.சாம்பசிவம், 6/1, பேக்கரி ஒழுங்கை, ஆஸபத்திரி வீதி, யாழ்ப்பாணம். (21102)

## தேவை

நோயாளி ஒருவரைப் பராமரிப்பதற்குப் பெண் பராமரிப்பாளர் தேவை. விரும்பியவர்கள் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: திருமதி நா.கனகம்மா, 43/1, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.(21080)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுலம், 27 வயது, கும்பலக்கினம், ஆயிலிய நட்சத்திரம், 4இல் செவ்வாய் மணமகனுக்கு 5'4" இற்கு குறையாத உயரமுள்ள மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் கனடிய PR பெற்றுத் தொழில் புரிகிறார். சாதகப்பிரதி, கல்வி, குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிககவும். விளம்பர இல. 1975, உதயன், யாழ்ப்பாணம். (21094)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 60ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் 3ஆம் பாதம் நட்சத்திர பெண்ணுக்கு மணமகன் தேவை. தாரமிழந்தவராக இருந்தாலும் ஏற்கப்படும். ஜாதகத்துடன தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1976, மே/பா உதயன். (21101)

## கால்நடை கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

துன்னாலை வேரண்டை மயானப பகுதியில் வெட்டப்படுகின்ற கால்நடைகளின் கழிவுப் பொருள்களால் அப்பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது.

கால்நடைகளின் கழிவுப் பொருள்கள் பல இடங்களிலும் வீசப்படுவதால் நாய்கள் அவற்றை இழுத்துச் சென்று அயலில் உள்ள வீட்டுக் காணிகளிலும பாடசாலை வளவிலும் போடுகின்றன. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.(ம-10-70)

---

# சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் - 2003

இடம்: கல்லூரி திறந்த வெளியரங்கு
காலம்: இன்று (06.08.2003) புதன்கிழமை முற்பகல் 9.30மணி
தலைவர்: ச. சிவனேஸ்வரன் *(அதிபர்)*
பிரதம அதிதி: திருமதி றெஜினா இருதயநாதன்
*(வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர்)*
நிறுவுநர் நினைவுப்பேருரை: கவிஞர் சோ. பத்மநாதன்
*(முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்)*
சிறப்பு விருந்தினர்கள்: க. தனபாலசிங்கம்
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர்)*
வி. ஈஸ்வரகுமார் *(நிறுவுநர் குடும்பம் லண்டன்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
பாடசாலை அபிவிருத்திச் சபை.
பழைய மாணவர் சங்கம்.

(21114) (21-19-26-14)

---

# பரிசுத்த ஆவிக்குரிய வல்லமை நிறைந்த செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் திங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே!

என்வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணங்கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 நாள்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச்செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

- ஓர் அடியாள்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி!

(21108) (19)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 18 - 11 - 1952



உதிர்வு 16 - 08 - 2002

அமரர்
## சிவசுப்பிரமணியம் நவரத்தினம்
(கிராம உத்தியோகத்தர் சித்தன்கேணி)

**ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு "அப்பா" என அழைக்க நீங்கள் இல்லையே அப்பா! உங்கள் உடல் எம்மை விட்டுச் சென்றாலும் உயிர் எங்களை விட்டு அகலாது எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீமகாகணபதியானைப் பிரார்த்திக்கின்றோம்.**

(சி-29314)

தங்கள் நினைவுடன்
**மனைவி, பிள்ளைகள், தாயார், சகோதரர்கள்.**

கோகுலம்,
சித்தன்கேணி. (21-26-19-14)

---

# துயர் பகிர்கின்றோம்



எமது திணைக்கள உத்தியோகத்தரும் நண்பருமாகிய
## திரு.சி.ஜெயவிந்தன்
அவர்களின் அன்புச் சகோதரி
## திருமதி ஜெயமாலா மகாதேவன்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*புள்ளி விவரக்கிளை,*
யாழ்.செயலகம்.

(21099)(21-19-14)

---

# கண்ணீர் அஞ்சலி



ஏழாலையைச் சேர்ந்தவரான
## இளையதம்பி தருமலிங்கம்
அவர்களின் அன்பு மனைவி
## திருமதி த.சரஸ்வதி

அவர்கள் காலமாகியதையிட்டு அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

(21106) (21-14-19)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தருமலிங்கம் சரஸ்வதி

ஏழாலையைச் சேர்ந்த திருமதி தருமலிங்கம் சரஸ்வதி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் இளையதம்பி தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் உதயராணி (கொழும்பு), உதயமலர் (உதயரோசா - கனடா), உதயகுமாரி (கனடா), உதயகுமாரன் (சுவிஸ்), உதயரஞ்சன் (கனடா), உதயரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற சோமசுந்தரம், சுந்தரலிங்கம் (கனடா), ஸ்ரனிஸ்லாஸ் (கனடா), சிவலிங்கம் (கனடா), வனஷா (சுவிஸ்), மகாதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வராணி (இந்தியா), தங்கராணி (இந்தியா), நாகேஸ்வரி, (நல்லூர்), யோகேஸ்வரி (நெடுங்கேணி), சூரியமலர் (ஏழாலை), பாக்கியநாதன் (ஏழாலை), சிவலிங்கம் (ஏழாலை), யோகராசா (ராஜ் மோட்டோர்ஸ் உரிமையாளர் - இந்தியா), வேலையா (கராஜ் உரிமையாளர் - சுன்னாகம்), சுப்பிரமணியம் (குட்டி, யாழ்.டீசல் என்ஜினியர் S.P.S. புனித ரான்ஸ்போட் உரிமையாளர்), சிவசாமி (ஏழாலை), உதயராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (கொக்குவில்), பூமணி (ஏழாலை), அன்னலெட்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2003) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

*ஏழாலை.* (21105) (21-24-19-14)

## வைத்திலிங்கம் வன்னியசிங்கம்

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வன்னியசிங்கம் (கிளி) அவர்கள் 01-08-2003 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும் மிதுலனின் பாசமிகு தந்தையும் தனலெட்சுமி, கனகம்மா, லோகாம்பிகை, கனகலிங்கம், அரியமலர் தனபாலசிங்கம், உருத்திரசிங்கம், புஸ்பமலர், தர்மகுலசிங்கம், சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபானந்தன், அருணகிரிநாதன் (ஆனந்தன்), பரமானந்தம், விக்கினேஸ்வரன், நித்தியானந்தம், அருளானந்தம் (அருள், முன்னாள் வர்த்தகர், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07-08-2003) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பிரான்ஸ் நேரம் (இ.நேரம் - மாலை 3.00) பிரான்ஸில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **க.ஆனந்தன்**
**(அம்பாள் களஞ்சியம், கொக்குவில்)**
**க.அருள் (பாட்ஷா)**
**தாவடி, கொக்குவில்.**

பாடசாலை ஒழுங்கை,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(19-21-14) (21103)

---

SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது
be sharp
யாழ்ப்பாணத்தில்



SHARP

உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம்மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up
Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# எஸ்-லோன் குழாய்கள் வாங்கும்போது S-lon பெயர் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.



## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் தரமுயர்ந்த எஸ்- லோன் பீ.வி.சி. குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் என்பன சகல அளவுகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

நீர்க்குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் வாங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோன் என்ற பெயர் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்கத் தவறாதீர்கள்.

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் யாழ்ப்பாண விநியோக நிலையம்
287 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2225950

Rediffusion DYR

## தொடர்ந்து ஐந்து நாள்களாக

# 15,000 தோட்டத் தொழிலாளர் மலையகத்தில் வேலை நிறுத்தம்

தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்தச் சம்பளம் மற்றும் மாதாந்தச் சம்பள முற்பணம் ஆகியவை உரிய நேரத்தில் வழங்கப்படாததை ஆட்சேபித்து கண்டி மாவட்டத்தில் சுமார் 15ஆயிரம் தோட்டத்தொழிலாளர்கள் கடந்த ஐந்து தினங்களாக வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இத்தொழிலாளர்கள் அனைவருமே அரசாங்கத்திற்குச் சொந்தமான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்டயாக்கம் என்பவற்றால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

தொழில் பிணக்குகள் மற்றும் சம்பளக் கட்டளைச் சட்டம் என்பவற்றின படி, ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவருடைய சம்பளத்தை பிரதி மாதமும் 10ஆம் திகதிக்குப் பிந்தாமலும், சம்பள முற்பணத்தை பிரதி மாதமும் 25ஆம் திகதிக்கு முன்னரும் வழங்கவேண்டும்.

ஆனால், இந்த இரு நிறுவனங்களையும் சேர்ந்த 32தோட்டங்களில் இந்தமுறை கடைபிடிக்கப்படுவதில்லை. இதனை ஆட்சேபித்து கடந்த மே, ஜூன் மாதங்களிலும் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது தொழிற் சங்கங்களின் கோரிக்கையின் பேரில் பிரதமர் தலையிட்டு, திறைசேரி மூலம் ஜூன், ஜூலை மாதங்களுக்கான சம்பளத்தை கடந்த 18ஆம் திகதி வழங்க ஒழுங்கு செய்தார்.

அதேவேளை, இனிவரும் மாதங்களில் குறிப்பிட்ட தினங்களில் சம்பளம், சம்பள முற்பணம் என்பன வழங்கப்படும் என தோட்ட நிர்வாகங்கள் சார்பில் அப்போது உறுதியும் அளிககப்பட்டது.

எனினும், கடந்த ஜூலை 25ஆம் திகதி வழங்கப்படவேண்டிய சம்பள முற்பணம் வழங்கப்படவில்லை.

தொழிற்சங்கங்களுக்கு அளித்த வாக்குறுதியை தோட்ட நிர்வாகங்கள் மீறிவிட்டன என்று தெரிவித்து அதனைக் கண்டித்தே மேற்படி தோட்டங்களைச்சார்ந்த தொழிலாளர்கள் கடந்த முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

பத்துத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் 15 ஆயிரம் பேர் நேரடியாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். ஏனைய 17 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தில் குதித்துள்ளனர். இதனால் அரசுக்குச் சொந்தமான சகல தோட்டங்களிலும் தேயிலை உற்பத்தி ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதேவேளை, மேற்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து கம்பனித் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள், தமது கொடுப்பனவுகள் குறிப்பிட்ட தினத்தில் வழங்கப்படும் வரை வேலைக்குப போகமாட்டோம் என்கின்றனர். அரச தோட்ட நிர்வாகங்களோ சம்பளம் வழங்கப்பணம் இல்லை எனக் கைவிரிக்கின்றன.

## கோடா வைத்திருந்த நபருக்கு 6மாத சிறை

யாழ்ப்பாணம்,ஓக.6

சட்டவிரோதமாக 20 லீற்றர் கோடா வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

குட்செட் வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த வேலாயுதம் - பூபதி என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நபர் மேற்படி குற்றச்சாட்டுக்காக ஏற்கனவே மூன்று தடவைகள் அபராதம் செலுத்தியுள்ளதாக மதுவரிப் பரிசோதகரால் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் குற்றவாளிக்கு ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனை விதித்தார். (ம-8)

## தொழில்நுட்ப கல்லூரி மாணவர் சுற்றுலா

யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரியைச் சேர்ந்த 150 மாணவர்கள் தென்பகுதித் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான நட்புறவுப் பயணமொன்றினை மேற்கொண்டு இன்று காலை புறப்படுகின்றனர். கடந்த வருடம் தென்னிலங்கையிலிருந்து தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர். (ம-12)


## தாதி தேவை

எமது வைத்திய நிலையத்துக்கு தாதி தேவை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:

முருகானந்தா வைத்திய நிலையம்

கண்டி வீதி, மாம்பழம் சந்தி.

(2115) (21-15-17)



## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

## மோட்டார் சைக்கிள்கள் பகிரங்க ஏலவிற்பனை

| | | |
|---|---|---|
| யமகா 90 | இல. 138 | - 5381 |
| யமகா 50 | இல. | - 1102 |

எமது சங்கத்தின் மேற்படி மோட்டார் சைக்கிள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் ஏலத்தில் பங்குபற்றி கூடுதல் விலை கேட்பவர் இவற்றைக் கொள்வனவு செய்யலாம்.

1. ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவோர் ரூபா 100/- வைப்புப்பணம் செலுத்தி பதிவுசெய்து கொள்ளவேண்டும்.
2. ஆரம்ப கேள்வி விலைகள் சங்கத்தினால் தீர்மானிக்கப்படும்.
3. மோட்டார் சைக்கிள்களை சங்கக் காரியாலயத்தில் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.
4. சித்திபெற்ற கேள்வியாளர் உடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் 14-08-2003ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 100/- வைப்புப்பணம் செலுத்தி நேரிலோ தபால் மூலமாகவோ பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம். 16.08.2003 ஆம் திகதி ஏலவிற்பனை நடைபெறும்.

பொது முகாமையாளர்

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி.

06-08-2003 (21-15-17)



## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்







பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்


பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.




பஜாஜ் - எனது காவலன்


விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175 Web Site: www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்:

■ 1748,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134 ■ 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222 ■ 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
■ நீதல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662 ■ 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050 ■ தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
■ இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே: 032-67410 பக்ஸ்: 032-67411 ■ பிராந்திய அலுவலகம்: இலக்கம் 72, நகரசபை கட்டிடம், பார்க் வீதி, நுவரெலியா. 052-35760, 052-35761

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்..........

விலாசம்..........

சேவை நிலையம்.......... தொலை பேசி..........

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka Advertising